கனடாவின் மூத்த தமிழ் இதழ் விளம்பரம்™ • VLAMBARAM™ Canada's Oldest Tamil Newspaper

35ஆவது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

நதி: 35 பாலம்: 13 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 01, 2025

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
www.divhomes.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

# G7 நாடுகளின் மாநாடு

G7 நாடுகளின் 51ஆவது மாநாடு கனடாவில், அல்பேட்டா மாகாணத்தில் உள்ள கனனாஸ்கிஸ் (Kananaskis) என்ற கிராமத்தில் நடைபெற்றது. 2025 ஜுன் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் இம்மாநாடு நடைபெற்றது. இது கனடாவில் நடைபெறும் ஏழாவது மாநாடு. இதற்கு முன்னர் கனனாஸ்கிஸ்சில் 2022ஆம் ஆண்டில் 28ஆவது மாநாடு நடைபெற்றது.

G7 நாடுகளில் கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரித்தானியா ஆகிய ஏழு நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் அங்கம் வகிக்கின்றன. G7 நாடுகளுக்கு தற்போது தலைமை வகிக்கும் கனடாவின் பிரதமர் மார்க் காணி கனனாஸ்கிஸ்இல் நடைபெற்ற G7 நாடுகளின் 51ஆவது மாநாட்டிற்கு தலைமை தாங்கினார்.

G7 மாநாட்டிற்கு தலைமை வகிக்கும் நாட்டிற்கு அந்நாடு G7 நாடுகளின் நலனிற்கு முக்கியம் எனக் கருதும் ஒரு சில நாடுகளுக்கு G7 மாநாட்டின் பார்வையாளர்களாகப் பங்குபற்ற அழைக்கும் தகுதி இருக்கிறது. இம்முறை இம்மாநாட்டிற்கு தலைமை வகிக்கும் கனடாவின் பிரதமர் மார்க் காணி அவுஸ்ரேலியா, பிரேசில், இந்தியா, மெக்சிகோ, தென் ஆபிரிக்கா, தென் கொரியா மற்றும் உக்ரைன் ஆகிய ஏழு நாடுகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அந்நாடுகளின் தலைவர்கள் மார்க் காணியின் அழைப்பை ஏற்று இம்மாநாட்டில் பங்குபற்றியிருந்தனர்.

மார்க் காணி இந்தோனேசியா, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தாலும் அவர்கள் இம்மாநாட்டிற்கு வரவில்லை. மாநாட்டில் நாடுகளின் தலைவர்களைவிட சில அமைப்புகளும் பங்குபற்ற அழைக்கப்பட்டிருந்தன. அவை நேட்டோ, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கி ஆகும்.

கனனாஸ்கிஸ் கிராமம் அல்பேட்டாவின் Rockies மலைத்தொடரின் சாரலில் கல்கரி நகரிற்கும் Banff நகரிற்கும் இடையில் அமைந்துள்ள பூங்கா அமைப்பிற்குள் உள்ளது. இதே இடத்தில் தான் 2002ஆம் ஆண்டில் கனடாவின் பிரதமராக இருந்த Jean Chretien G8 நாடுகளின் 28ஆவது மாநாட்டை நடத்தினார். அப்போது G7 நாடுகளுடன் ரஷ்யாவும் சேர்க்கப்பட்டு G8 நாடுகளாக இருந்தன. ரஷ்யா Crimea பிரதேசத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டதைத் தொடர்ந்து 2014 மார்ச்இல் G8இல் இருந்து விலக்கி வைக்கப்பட்டது.




இதை ஏற்றுக் கொள்ளாத ரஷ்யா G8 நாடுகளில் இருந்து 2017ஆம் ஆண்டு நிரந்தரமாக விலகிக் கொண்டது. 1973ஆம் ஆண்டில் உலகில் வலுவான தொழில்துறை பொருளாதாரத்தை (Industrialized Countries) கொண்டு இருக்கும் நாடுகளின் நிதி மந்திரிகள் கூடி உருவாக்கிய மன்றம் பின்னர் 1975 உத்தியோகப்பூர்வமாக G7 நாடுகள் என அழைக்கப்பட்டது.

G7 நாடுகளின் 51ஆவது மாநாடு ஆரம்பமாகும் முன்னர் கனடியப் பிரதமர் மார்க் காணி விடுத்த செய்தியில், "ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு புவிசார் அரசியல் பதட்டங்களை எதிர்கொண்டு உருவாக்கப்பட்ட G7 என்ற இந்த அமைப்பு ஒத்துழைப்பு, நிலையான தன்மை (Stability) மற்றும் வளங்களைப் பகிரக் கூடிய ஒரு மன்றமாகும். 2025ஆம் ஆண்டில் உலகளாவிய சவால்கள் தீவிரமடைவதால் G7 நாடுகள் இத்தருணத்தை உறுதியான நோக்கத்துடனும் வலிமையுடனும் சந்திக்க வேண்டும். வலுவான பொருளாதாரத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ள கனடா மூன்று முக்கிய விடயங்களில் G7 நாடுகளின் ஒத்துழைப்பை நாட முன்வந்துள்ளது.

**நமது சமூகங்களையும் உலகையும் பாதுகாத்தல்:** அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப் படுத்துதல். வெளிநாட்டுத் தலையீடு, நாடு கடந்த குற்றங்களை எதிர்கொள்வது. காட்டுத்தீ போன்ற இயற்கை அழிவிற்கு இணைந்து ஒன்றாக எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை உருவாக்குதல்.

**எரிசக்தி பாதுகாப்பை உருவாக்குதலும் Digital மாற்றத்தை விரைவுப்படுத்தலும்:** முக்கியமான கனிமவள விநியோகப் பாதையை வலுப்படுத்துதல். பொருளாதார வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துதல்.

**சமூகங்களுக்கு இடையேயான கூட்டுறவை பாதுகாத்தல்:** வலுவான உட்கட்டமைப்புகளை உருவாக்க மகத்தான தனியார் துறை முதலீடுகளை ஊக்குவித்தல். அதிக ஊதியம் தரும் வேலைகளை உருவாக்குதல். வணிக நிறுவனங்கள் போட்டியிடவும் (Compete) வெற்றி பெறவும் (Succeed) கூடியவாறு சந்தைகளைத் திறப்பது.

மேற்கூறிய மூன்று முக்கிய விடயங்களை விட உக்ரைன் மற்றும் பல இடங்களில் நடைபெறும் மோதல்களுக்கு ஒரு நியாயமான தீர்வையும், நீடித்த அமைதியையும் உருவாக்கும் நோக்கத்துடன் G7 நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளுடனும் கலந்துரையாடும் திட்டங்களை வகுத்தல், மற்றும் நமது நீண்டகால பாதுகாப்பு மற்றும் செழிப்பு என்பவற்றிற்கு உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் வலுவான கூட்டுறவைப் பேணுதல் இன்றி யமையாதது என்பதை வலியுறுத்தல் போன்றனவும் இம்மாநாட்டில் கலந்துரையாடப்படும்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. கனடியப் பிரதமரின் பார்வையாளர்களுக்குரிய நாடுகளின் அழைப்பில் இந்தியாவும் அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி இருந்தது கனடிய சீக்கிய சமூகத்தினரிடையே எதிர்ப்பை உருவாக்கி இருந்தது. 2023ஆம் ஆண்டு கனடாவில் சீக்கிய பிரிவினைவாதத் தலைவரின் படுகொலையில் இந்திய அரசு சம்பந்தப்பட்டு இருந்ததாக கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ குற்றம் சாட்டியிருந்தார்.

அதற்கு எவ்வித ஆதாரத்தையும் கனடா சமர்ப்பிக்கவில்லை என இந்திய அரசு அப்போது தெரிவித்திருந்தது. அதைத் தொடர்ந்து கனடாவிற்கும் இந்தியாவிற்குமிடையேயான உறவுகள் விரிசல் அடைந்திருந்தன.

தற்போது கனடியப் பிரதமர் மார்க் காணி இந்தியப் பிரதமரை கனடாவிற்கு அழைத்தது "சீக்கிய கனடியர்களுக்குச் செய்த துரோகம்" என்று உலக சீக்கிய அமைப்பு தெரிவித்திருந்தது. ஆனால், தற்போது கனடாவின் வர்த்தகத்தை அமெரிக்காவுடன் மட்டும் வைத்திருக்காமல் மற்ற நாடுகளுக்கும் விரிவுபடுத்த விரும்பும் மார்க் காணி இந்தியப் பிரதமரை G7 மாநாட்டிற்கு பார்வையாளராக அழைக்கும் முடிவை வலியுறுத்தினார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்




Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

My services are 100% FREE
For First Time Buyers/Buyers/Tenants
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
www.tisipara.com
Call Para
647.296.0596.

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
TRUTH BUILDS TRUST

# House for Sale / Lease / Condo / BSMT

## Office Unit for Lease

GTA Square
Finch Ave. / Middlefield
2nd Floor Unit
Busy Mall in Scarborough
Under ground Parking

Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Sale

2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old (Pickering)
Asking $649,900

Vishal Sarda*
Call : 416 629 1973

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Separate Entrance
Morningside | Sewells
Great Location

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Sale

2BR / 1WR
700 SF
Hwy 400 / Hwy 7

Higher Floor

Rajiv Agnihotri *
Call : 416 930 0684

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / Hwy 401

Tridel Building

Gulshan Sharma**
Call : 416 407 5911

## Condo for Rent

2 BR Condo
2 Wash Rooms
Kennedy / Eglinton

Walk to
Kennedy Subway

Tisi Para *
Call : 647 296 0596

## Condo for Sale

Toronto / Downtown
Studio
(Reve Condo)

Floor to Ceiling Window
Asking 429K

Preethi Pillai *
Call : 416 276 5297

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph*
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

* Sales Rep.
** Broker

Tel: 416-321-6969

* Independently owned and operated.

Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front 2025-06-30 5:28 PM Page 3






Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கொள்கையை மறந்த என்பிபி

## – அரவின் –

இலங்கையில் மே 6ஆம் திகதி இடம் பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் அறுதி பெரும்பான்மை பலத்தை எந்த ஒரு தரப்பும் பெற்றிருக்காத சபைகளில் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

339 ஊராட்சி சபைகளுக்கு இடம்பெற்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு 151 சபைகளில் மாத்திரம் தனித்து ஆட்சியமைப்பதற்கான பெரும் பான்மை பலம் கிடைத்திருந்தது.

தமிழ் அரசுக் கட்சி ஆறு உள்ளூராட்சி சபைகளில் அறுதிப் பெரும்பான்மையை பெற்றிருந்தது.

ஏனைய சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக, ஏனைய கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களை அணுக வேண்டிய நிலை காணப்பட்டது.

நாடு முழுவதும் பெரும்பாலான சபை களில் ஆட்சியமைப்பதற்கு பிற தரப்பு களை நம்பி இருக்க வேண்டியிருந்தது அல்லது எதிர்க்கட்சிகள் ஆட்சியமைப் பதை வேடிக்கை பார்க்க வேண்டிய சூழல் இருந்தது. இது தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்ட முதலாவது சறுக்கல்.

ஏனென்றால், உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னர், தேசிய மக்கள் சக்தியிடம் பெரும்பாலான சபைகளில் தனித்து ஆட்சி அமைக்க முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது.

அதன் அடிப்படையில், தாங்கள் எந்த ஒரு தரப்புடனும் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைக்கமாட்டோம் என்று அதன் தலைவர்கள் உறுதியாக கூறியிருந்தனர்.

ஆனால், தேர்தலுக்குப் பின்னர் பாதிக்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளில் அந்தக் கட்சியினால் அறுதிப் பெரும் பான்மையைப் பெற முடியவில்லை. இதனால் வேறு வழியின்றி பிற தரப்பு களை இணைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த முதலாவது சறுக்கல், தொடர்ச்சி யாக தேசிய மக்கள் சக்திக்கு அடுத்து அடுத்து பல சறுக்கல்களைச் சந்திக்க வேண்டிய நிலைக்குள் தள்ளியது.




முதலில் எவருடனும் ஆட்சியமைக்க மாட்டோம் என்று கூறிய ஆளும்கட்சி, பின்னர் சுயேட்சைக் குழுக்களுடன் மாத்திரம் ஆதரவு பெறுவதற்காக, பேச்சு நடத்துவோம் என்று கூறியது.

அப்படி இருந்தும் பல உள்ளூராட்சி சபைகளில் அக்கட்சியினால் ஆட்சியை நிறுவ முடியாத நிலை ஏற்பட்டது.

அந்தக் கட்டத்தில் ஆட்சி அமைப்பதற் காக பிற கட்சிகளை அணுக மாட்டோம், ஆனால் தனி உறுப்பினர்களின் ஆதரவு டன் ஆட்சி அமைப்போம் என்று தேசிய மக்கள் சக்தி நிலைப்பாட்டை மாற்றியது.

இது, வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களை தமது பக்கம் இழுப்பதற்கு அது தயாரா கிறது என்பதை வெளிக்காட்டியது. இது அடுத்த தவறுக்கு வழி விட்டுக் கொடுத்தது.

அண்மையில் நடந்த மூன்று தேர்தல்களில் ஏனைய கட்சிகளை குறிப்பாக ஆட்சியில் இருந்த கட்சிகளை திருடர்கள், கொலை காரர்கள் என்றது. தங்களைத் தவிர மற்றவர்களை மோசடிக்காரர்களாகவும், குற்றவாளிகளாகவுமே அடையாளப்படுத்தியது.

ஆனால், அப்படி திருடர்கள், குற்றவாளி கள் என கூறிக் கொண்ட தரப்புகளுடன், சில உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக கூட்டணி அமைத்துக் கொண்டது தேசிய மக்கள் சக்தி.

பொதுத் தேர்தலின்போது, மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரசை கடுமையாக விமர்சனம் செய்து தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட ஆசனங்களைப் பெற்றிருந்தது.

இதுவரை காலமும் மலையக அரசியல் வாதிகள் அங்குள்ள மக்களை ஏமாற்றி வந்ததாகவும், அந்த நிலையை மாற்றி அமைத்து இருப்பதாகவும் மலையகத்தின் புதிய அரசியல் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், ஊடகங்களின் முன்பாக செவ்விகளை கொடுத்திருந்தனர்.

ஆனால் இப்போது அதே இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன், தேசிய மக்கள் சக்தி நுவரெலிய மாவட்டத்தில் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்து இருக்கிறது.

மூன்று உள்ளூராட்சி சபைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு தவிசாளர் பதவியைக் கொடுத்து பிரதி தவிசாளர் பதவியை பெற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தி, நுவரெலிய மாநகர சபையில் அந்தக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துக் கொண்டது.

முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி, பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அதன்பின்னர் சிறிலங்கா பொதுஜன பெரமுன என மாறி மாறி ஆட்சியிலிருந்த கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு, அரசாங்கத்தில் அங்கம் வகித்து வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இப்பொழுது தேசிய மக்கள் சக்தியுடன் கூட்டுச் சேர்ந்து பிரதேச சபைகளில் ஆட்சி அமைத்திருக்கின்றது.

அப்படியானால், கடந்த கால அரசாங்கங் களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவறுகள் இழைக்கவில்லையா?

முன்னைய அரசாங்கங்களின் தவறுகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு பங்கு இருக்கவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

இதேபோன்ற, தேசிய மக்கள் சக்தி தனது கொள்கை கோட்பாட்டுக்கு முரணாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரின் ஆதரவுடன்கூட, ஆட்சியை அமைத்திருக்கிறது.

காலி மாநகர சபையில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினருக்கு பிரதி மேயர் பதவியை வழங்கி விட்டு அந்த சபையை அது கைப்பற்றியிருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இதேநிலை நேர்ந்திருக்கிறது.

பொதுஜன பெரமுனவை கொலைகாரர் கள், கொள்ளைக்காரர்கள், மோசடியாளர் கள் என்று விமர்சித்துவிட்டு, அந்தக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரின் ஆதரவுடன், ஆட்சி அமைக்கின்ற அளவிற்கு தேசிய மக்கள் சக்தி கீழ் இறங்கிப் போனது.

மற்றொரு பக்கம், மட்டக்களப்பு மாவட்டத் தில் ஓர் உள்ளூராட்சி சபையில் பிள்ளை யான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்திருக் கின்ற அதேவேளை, வாகரையில் பிள்ளை யான் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கும் ஒத்துழைப்பும் வழங்கியிருக்கிறது.

ஏனென்றால் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக பிள்ளையான் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.


அவ்வாறான குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஒரு கட்சியுடன் இணைந்து தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்துவிட்டு தங்களை புனிதர்களாகக் காட்டிக்கொள்ள முற்படுகிறது.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபியுடன் இலங்கை தமிழரசு கட்சி கூட்டணி அமைத்துக் கொண்டதை- கடுமையாக விமர்சித்து வருகிறது தேசிய மக்கள் சக்தி. ஆனால் பொது மக்களைக் கடத்தி படுகொலை செய்தவர்களுடன் தமிழரசுக் கட்சி கூட்டு சேர்ந்திருப்பதாக, விமர்சனம் செய்த தேசிய மக்கள் சக்தி, கிழக்கில் பிள்ளையான் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்ததை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

அதுமாத்திரமன்றி கற்பிட்டி பிரதேச சபையில் அறுதிப் பெரும்பான்மை இல்லாமலேயே ஆட்சி அமைத்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி. அங்கு பெரும் பான்மை பலம் இல்லாத சூழலில்கூட, அக்கட்சி ஆட்சி அமைக்க முனைந்தது அப்பட்டமான ஒரு ஜனநாயக மீறல்.

இவ்வாறான செயற்பாடுகளால் தேசிய மக்கள் சக்தி நம்பகத்தன்மையை இழக்கத் தொடங்கியிருக்கிறது. அது கொள்கை என்று கூறிக்கொண்ட விடயங் களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறது?

விளம்பரம்
VLAMBARAM
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front  2025-06-30  5:28 PM  Page 5



# G7 நாடுகளின்....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உலகில் ஐந்தாவது பெரிய பொருளாதாரத்தையும் மற்றும் பல வர்த்தக விநியோகச் சங்கிலிகளின் மையத்தில் உள்ள நாடான இந்தியாவை இம்மாநாட்டிற்கு அழைப்பது முக்கியம் என அவர் தெரிவித்தார். மார்க் காணி ஒட்டவாவில் நடைபெற்ற ஊடகவியலாளர்களின் மாநாட்டில், "கனடாவும், இந்தியாவும் சட்ட அமலாக்கம் சம்பந்தமாக உரையாடல்களுக்கு ஒப்புக்கொண்டுள்ளோம். இது பொறுப்புக் கூறல் தொடர்பான பிரச்சினைகளை அங்கீகரிக்கிறது. இவ்வாறான சூழலில்தான் நான் இந்தியாவிற்கு அழைப்பை விடுத்துள்ளேன்" என்று கூறினார்.



Indian PM Narendra Modi and Canadian PM Mark Carney
Thanks: Darryl Dyck /The Canadian Press

G7 மாநாட்டின் முடிவில் கனடியப் பிரதமர் மார்க் காணியும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இருதரப்புக் கூட்டத்தை நடத்தினர். இதில் இரு தலைவர்களும் ஜனநாயக விழுமியங்கள், ஒவ்வொரு நாட்டின் சட்டத்திற்கு மரியாதை கொடுத்தல், நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டுக் கொள்கைகள் என்பவற்றை நிலை நிறுத்துவதற்கான உறுதிபாட்டின் அடிப்படையில் இந்தியா - கனடா உறவுகளின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தினர். இரு தலைவர்களும் நாடுகளுக்கிடையேயான தொழில்நுட்பம், Digital மாற்றம், உளவு பாதுகாப்பு மற்றும் முக்கியமான கனிமவளங்கள் போன்றவை பற்றியும் கலந்துரையாடினர். முடிவில் இரண்டு நாடுகளிலும் உள்ள குடிமக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வழக்கமான சேவைகளை வழங்குவதற்காக மீண்டும் தமது நாடுகளுக்கான தூதுவர்களை (High Commissioner) நியமிக்க இருதலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

G7 மாநாடு ஆரம்பிக்க முதல்நாள் பிரித்தானியாவின் பிரதமர் Keir Starmer கனடாவிற்கு வந்து ஒட்டாவாவில் கனடியப் பிரதமர் மார்க் காணியைச் சந்தித்தார். அச்சந்திப்பின்போது பிரித்தானியாவுடனான கனடாவின் புதிய பொருளாதார மற்றும்




U.S. President Donald Trump and Canadian Prime Minister Mark Carney
Thanks: Chip Somodevilla /Getty Images

பாதுகாப்பு ஒப்பந்தங்களில் இரண்டு நாட்டின் பிரதமர்களும் கையொப்பமிட்டனர். G7 மாநாட்டின் முதல்நாள் மாநாடு ஆரம்பிக்கும் முன்னர் கனடியப் பிரதமர் மார்க் காணி அமெரிக்க அதிபர்




Canadian Prime Minister Mark Carney and his wife Diana Fox Carney welcome US President Donald Trump
Thanks: Qatar Tribune

டொனால்ட் டிரம்ப்ஜ தனிப்பட்ட முறையில் சந்தித்து உரையாடினார். அப்போது அமெரிக்க அரசின் சுங்கவரியால் இரு நாட்டிலும் தொழிலாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள்மீது ஏற்பட்டுள்ள வர்த்தக அழுத்தங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர். கனடாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான புதிய பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகள் குறித்த பேச்சுவார்தைகள் பற்றியும் உரையாடினர். இரண்டு தலைவர்களும் இன்னும் 30 நாட்களுக்குள் பேச்சுவார்த்தைகளை நடத்தி இரு நாடுகளுக்குமிடையே ஒரு பொருளாதார ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளனர்.

முக்கியமான கனிம வளங்கள் பரிமாற்றம் பற்றியும், துப்பாக்கி மற்றும் போதைப் பொருள் கடத்தல், எல்லைப் பாதுகாப்பு போன்றவற்றைப்பற்றி G7 மாநாட்டில் கலந்துரையாடுவதற்கும் இரண்டு தலைவர்களும் ஒத்துக் கொண்டனர். முதலாவது நாள் மாநாட்டின் பின்னர் மத்திய கிழக்கில் இஸ்ரேலிற்கும் ஈரானிற்குமிடையேயான போர் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து டொனால்ட் டிரம்ப் G7 மாநாட்டிலிருந்து சீக்கிரமாக வெளியேறி வோஷிங்டனுக்குத் திரும்பினார். இதனால் டொனால்ட் டிரம்ப்உடன் தனிப்பட்ட முறையில் உரையாட இருந்த மெக்சிகோ அதிபர் Claudia Sheinbaum போன்ற ஏனைய தலைவர்களது சந்திப்பு நடைபெற முடியாமல் போனது.

கனடியப் பிரதமர் மார்க் காணி மற்றும் உக்ரைன் அதிபர் Volodymyr Zelenskyyஇனுடைய தனிப்பட்ட சந்திப்பின் பின்னர், மார்க் காணி கனடா இவ்வருடம் உக்ரைனின் பாதுகாப்பிற்காக கவச வாகனங்கள், வெடி மருந்துப்பொருட்கள், சிறிய ஆயுதங்கள், ட்ரோன்ஸ் (Drones) போன்ற இராணுவ உதவி வழங்க $2 பில்லியனை வழங்கும் என்று தெரிவித்தார். அத்துடன் கனடா நாட்டில் கடந்த வருடம் G7 மாநாட்டில் உக்ரைனுக்கு வழங்க உறுதியளித்த $5 பில்லியன் கடனுதவியில் $2.5 பில்லியனை 2025 மார்ச் மாதத்தில் வழங்கியிருந்தது. மீதி $2.3 பில்லியனையும் கனடா தற்போது வழங்குகிறது எனவும் தெரிவித்தார்.




G7 மாநாட்டின் முடிவில் ஆறு கூட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அவை பின்வரும் தலைப்பில் வெளியிடப்பட்டன.

* எதிர்கால பொருளாதாரங்களுக்கு சக்தி அளிக்கும் உயர்தர முக்கியமான கனிம வள விநியோகச் சங்கிலிகளைப் (Supply Chains) பாதுகாத்தல்.

* பொது மற்றும் தனியார் துறைகளில் பாதுகாப்பான, பொறுப்பான மற்றும் நம்பகமான செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.



RCMP officers guard a Kananaskis G7 summit checkpoint
Thanks: Gavin Young/Postmedia

* பொருளாதாரங்களை வளர்க்க, உலகளாவிய சவால்களைத் தீர்க்க மற்றும் சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க குவாண்டம் தொழில் நுட்பத்தின் (Quantum Technology) முழுத்திறனையும் பிரயோகிக்க ஒத்துழைப்பு அதிகரித்தல்.

* உலகம் முழுவதும் அதிகரித்து வரும் காட்டுத்தீயை சிறப்பாகத் தடுக்க, போராட மற்றும் மீட்க பலதரப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்.

* நாடு கடந்த அடக்குமுறையை மையமாகக் கொண்டு, வெளிநாட்டுத் தலையீட்டைத் தொடர்ந்து எதிர்த்துப் போராடுவதன்மூலம் சமூகத்தில் உள்ள அனைவரின் உரிமைகளையும், நாட்டின் இறையாண்மையின் அடிப்படைக் கொள்கையையும் பாதுகாத்தல்.

* நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களை (Organized Crime Groups) அகற்றுவதன்மூலம் புலம்பெயர்வோர் கடத்தலை தடுத்தல்.




G7 நாடுகள் தொடர்ந்தும் உள்ளூர் ஆட்சி மன்றங்கள், முதற்குடி மக்கள், பொதுமக்கள் சமூகம், தொழிலாளர் சமூகம், சர்வதேச அமைப்புகள் மற்றும் பங்குதாரர்கள் எல்லோருடனும் இணைந்து பணியாற்ற உறுதி பூண்டுள்ளது. கனடாவின் தலைமையின்கீழ் G7 நாடுகள் 2025ஆம் ஆண்டு முழுவதும் தமது பணியைத் தொடரவும் உறுதிபூண்டுள்ளது.



Snipers and spotters keep watch from the roof of the Kananaskis Golf Course club house
Thanks: Gavin Young/Postmedia

அத்துடன் பிரான்ஸின் தலைமையில் 2026ஆம் ஆண்டில் பணியைத் தொடர எதிர்பார்க்கிறது என G7 மாநாட்டின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.





A planned protest on the outskirts of Banff during the G7 Summit held in Kananaskis
Thanks: Dean Pilling/Postmedia

G7 மாநாட்டின்போது கனனாஸ்கிஸ்இல் உள்ள கட்டிடங்களின் கூரைகளில் கூட்டங்களில் உள்ளோரைக் கவனித்து அடையாளம் காணுவோரும் (Spotters) குறி தவறாமல் துப்பாக்கி சுடும் வீரர்களும் (Snipers) பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர். அத்துடன் எதிர்ப்புகளைக் காட்டுவோர் கூடுவதற்காக சிறப்பு இடங்களை கனடிய RCMP நகர் காவல் குழு அறிவித்து இருந்தது. சில நூற்றுக் கணக்கானோர் இவ்விடங்களில் கூடினர் எனவும் அவர்கள் Kashmiri, Ethiopian, Palestinian மற்றும் Ukrainian. மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைக் குறித்து பதாகைகள் வைத்திருந்தனர் எனவும் நகர்காவலர் அறிக்கை விடுத்திருந்தனர். எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் அமைதியான முறையில் தமது எதிர்ப்புகளை இவர்கள் காட்டினர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.




A planned protest on the outskirts of Banff during the G7 Summit

Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front 2025-06-30 5:28 PM Page 6



# கனவாகிப் போன ஒற்றுமை

## – முகிலன் –

சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கும் அவற்றுடன் இணைந்து செயற்பட்ட கட்சிகளுக்கும் வாக்களிக்க வேண்டாம் என, உள்ளூராட்சித் தேர்தலின்போது தமிழ்த் தேசிய கட்சிகள் முக்கியமான கோசத்தை முன் வைத்திருந்தன.

தேசிய மக்கள் சக்தி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் பெற்றிருந்த வெற்றியை அடுத்து ஏற்பட்ட அச்சுறுத்தல், இந்தக் கோரிக்கை உள்ளூராட்சித் தேர்தலில் வலுப்பெறுவதற்குக் காரணமாக இருந்தது.

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியை, தமிழ்த் தேசிய கட்சிகள் மிகப்பெரிய அச்சுறுத்தலாகப் பார்த்தன. அது தமிழ்த் தேசிய அரசியலுக்கும் தமிழரின் அரசியல் அபிலாசைகள் மற்றும் அடிப்படைக் கோரிக்கைகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது உண்மை.

அதனால் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளையும் அவற்றுடன் ஒத்துழைத்து செயற்படும் தமிழ்க் கட்சிகளையும் ஓரம் கட்ட வேண்டும், ஒதுக்கித் தள்ள வேண்டும் என தமிழ் வாக்காளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தனியே தேசிய மக்கள் சக்திக்கு எதிரான அஸ்திரம் அல்ல.

சிங்கள பௌத்த தேசியவாத கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளுக்கும் கூட பொருத்தமானதுதான்.

தமிழ் மக்கள் மத்தியில், தமிழ்த் தேசியக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பிரச்சாரம் உள்ளூராட்சித் தேர்தலில் கணிசமான பலனை கொடுத்திருந்தது.

வடக்கு கிழக்கில் தறிகெட்டு ஓடும் வண்டி போல, தேசிய மக்கள் சக்தி வெற்றிகளை அள்ளிக்கொண்டு செல்லுகின்ற நிலையை கட்டை போட்டு தடுத்து நிறுத்தியது.

இலங்கை தமிழரசுக் கட்சி அதிக உள்ளூராட்சி சபைகளில் கூடுதல் வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. ஆட்சி அமைப்பதற்கான அங்கீகாரத்தையும் பெற்றது. அதுதவிர தமிழ்த் தேசிய பேரவை, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி போன்ற தமிழ்த் தேசிய தரப்புக்களும் கணிசமான வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றிருந்தன.

அடுத்த கட்டம் தான் சிக்கலானது.
வடக்கு கிழக்கில் தமிழரசு கட்சி ஆறு உள்ளூராட்சி சபைகளில் மாத்திரம் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கக்கூடிய நிலையில் இருந்தது.

ஏனைய இடங்களில் அது அல்லது மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகள் பிற கட்சிகள், சுயேட்சைக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்க வேண்டிய நிலையில் இருந்தன.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்கிடையில் ஒன்றிணைந்து, விட்டுக்கொடுப்புடன், புரிந்துணர்வுடன், ஆட்சியமைக்க முன்வரும் என்ற எதிர்பார்ப்பு பரவலாகக் காணப்பட்டது. ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சி தனது போக்கில் இருந்து மாறவில்லை. அது ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கோ இணைந்து செயற்படுவதற்கோ தயாராக இருக்கவில்லை. இந்தச் சூழலில் தமிழ்த் தேசிய பேரவையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து, தாங்கள் ஒரு கொள்கைக் கூட்டுக்குள் வந்திருப்பதாக அறிவித்திருந்தன.

இது கொள்கைக்கூட்டு அல்ல, அதிகாரங்களைப் பெறுவதற்காக, ஆசனங்களைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட கூட்டு என இலங்கை தமிழரசுக் கட்சி விமர்சித்தது. ஆனால், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கும் விடயத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகள் எதுவுமே தூய்மையான சிந்தனையுடன் செயற்படவில்லை. அவை பொதுநோக்கிலும் சரி, தனிப்பட்ட நோக்கிலும் சரி, முடிவுகளை எடுப்பதில் நிலையான கொள்கையைக் கடைப்பிடிக்க வில்லை.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்திருந்தால் அது வலுவான ஒன்றாக பார்க்கப்பட்டிருக்கும்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் ஆக்கபூர்வமான ஒரு தளத்தில் பயணிக்கும் என்ற நம்பிக்கையை மக்களுக்குக் கொடுத்திருக்கும். ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் அவ்வாறான ஒரு நம்பிக்கையை மக்கள் மத்தியில் உருவாக்கத் தவறிவிட்டன. அவை பொதுவான அடிப்படையில் மாத்திரமன்றி, மாவட்ட அடிப்படையில்கூட, சீரான நிலைப்பாட்டுக்கமைய செயற்பட்டு இருக்கவில்லை.

தமிழ்த் தேசிய விரோத நிலைப்பாட்டைக் கொண்ட கட்சி என இதுவரை காலமும் விமர்சித்து வந்த ஈபிடிபியுடன் தமிழரசுக் கட்சி இணைந்து, யாழ்ப்பாணம் மாநகர சபை உள்ளிட்ட சபைகளில் ஆட்சி அமைத்திருக்கிறது.

சில இடங்களில் அவர்களால் வெற்றி பெற முடிந்தது. சில இடங்களில் அவர்களால் வெற்றிபெற முடியாமல் போனது.
அதேபோன்று, தமிழரசுக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவுடனும் ஆட்சி அமைத்திருக்கிறது.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்றில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள மறுத்த தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஆட்சியைப் பகிர்ந்து கொண்டிருக்கிறது. இது தமிழரசுக் கட்சிக்குள்ளேயே அதிருப்திகளை ஏற்படுத்தி, மாவட்ட கிளைத்தலைவராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கட்சிப் பதவிகளைத் துறந்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சி, தேர்தலின்போது, சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கு எதிராகப் பிரச்சாரங்களை செய்துவிட்டு, சிங்களப் பேரினவாதக் கட்சியுடன் ஆட்சியமைக்க கூட்டுச் சேர்ந்திருக்கிறது. அதேபோல, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஒவ்வொரு மாவட்டத்தில் ஒவ்வொரு தரப்புகளுடனும், கூட்டுச் சேர்ந்து, ஆட்சி அமைத்திருக்கிறது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமன்றி தேசிய மக்கள் சக்தியுடனும் அது இணைந்து ஆட்சியமைத்திருப்பதுதான் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு உள்ளூராட்சி சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உறுப்பினர் வாக்களித்திருந்தார். அங்கு தமிழரசுக் கட்சியைத் தோற்கடிப்பதற்காக அந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அதே வேளை மன்னார் நகர சபையின் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக - அந்தக் கட்சி தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தது.

நானாட்டானில் பிரதி தவிசாளர் பதவிக்காக அக்கட்சிக்கு முண்டு கொடுத்திருக்கிறது.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஆட்சி அமைத்திருக்கிறது.

இந்த இடத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் கொள்கை கூட்டு வைத்துக்கொண்ட தமிழ்த் தேசிய பேரவை அமைதியாக இருக்கிறது.

மன்னாரில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எடுத்த தீர்மானம், தமிழரசுக் கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தலைமை போட்ட திட்டங்களை தோற்கடிப்பதற்கு அந்தக் கட்சியினரே அங்கு துணைபோயிருந்தனர்.

தமிழரசின் தலைமை எதிர்பார்த்தது நடக்கவில்லை என்றதும், தமிழ்த் தேசியக் கொள்கையை சங்குக் கூட்டணி குழி தோண்டி புதைத்து விட்டது என்று தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கொள்கையைக் கைவிட்டு, அதற்கு விரோதமாக செயற்படும் கட்சியின், வாசல்படி தேடிச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியவர் சி.வி.கே.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கொள்கை அரசியல் பற்றி பேசுவதற்கு அவருக்கு அருகதை இல்லை என்று பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், தமிழ்த் தேசிய அரசியலை சந்தர்ப்பவாத அரசியலாக மாற்றியதில் தமிழரசுக் கட்சிக்கு கணிசமான பங்கு இருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னர், அந்தக் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கையாண்டது.

ஜனாதிபதித் தேர்தல்களில், சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச போன்றோரை ஆதரித்து சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளுக்கு முண்டு கொடுத்தது. இதன் மூலம் தமிழருக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

தமிழ்த் தேசிய அரசியலும் சிங்களத் தேசிய அரசியலும் ஒட்டிக்கொள்ள முடியாதவை. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒட்டிவாழ முடியாது, ஒன்றுபட்டு வாழமுடியாது, ஒத்துழைக்க முடியாது என்று 1970களிலேயே, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கா.பொ. இரத்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். ஆனால் தமிழரசு கட்சியோ இப்போது, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க சிங்களத் தேசியக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கிறது.

இதன்விளைவாக, இன்று தமிழரசுக் கட்சி ஆட்சி அமைக்க வேண்டிய பல சபைகளில் ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டிருந்தால் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டிருந்தால் இன்னும் பல சபைகளில் ஆட்சி அமைத்திருக்க முடியும். ஆனால் தமிழரசுக் கட்சியும் சரி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் சரி, தமிழ் காங்கிரசும் சரி பிற கட்சிகளுடன் விட்டுக்கொடுப்புக்குத் தயாராக இருந்த அளவுக்கு தமிழ் தேசியக் கட்சிகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கவில்லை.

இந்த அடிப்படைத் தவறு திருத்தப்படாத வரை தமிழ் தேசிய அரசியலில் ஒற்றுமை பற்றி சிந்திக்கவே முடியாது.



யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# தமிழக அரசியலில் எழுத்தாளர்களுக்கு இடம் இல்லை! – எழுத்தாளர் இந்துமதி

## கண்ணன்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

கேள்வி - தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியாக நீங்கள் இருந்த அதே காலகட்டத்தில் கலைஞர் கருணாநிதியுடனும் உங்களுக்கு நல்ல நட்பு இருந்தது. அது தொடர்பாக ஜெயலலிதா என்ன சொன்னார்?

பதில் - கத்தி மீது நடக்கிற மாதிரியான விடயம் அது. கலைஞருடனான நட்பு பற்றி நான் ஜெயலலிதாவுடன் பேசவே மாட்டேன்.

கேள்வி - கலைஞரை நள்ளிரவில் கைது செய்து விடுதலை செய்த பின்னர் நீங்கள் அவரை சந்தித்திருக்கிறீர்கள். அன்றே ஜெயலலிதாவையும் சந்தித்திருக்கிறீர்கள். அன்று என்ன நடந்தது?

பதில் - அப்போலோ சென்று கலைஞரைப் பார்த்தேன். "பாரும்மா; பாரும்மா;" என்று காட்டினார். கையெல்லாம் கண்டிப்போய் இருந்தது. "கனி(கனிமொழி)யைப் போய் பாரும்மா, கனியைப் பந்தாடி போட்டாங்கம்மா" என்றார். எல்லாவற்றையும்விட முரசொலி மாறனையும் மிக மோசமாக நடத்தியிருந்தனர்.

கலைஞரை பார்த்துவிட்டு நேராக ஜெயலலிதா வீட்டுக்குத்தான் போனேன். "நீ எங்கே இருந்து வர்றேன்னு தெரியும்" என்றார். "ஆமாங்க, அங்கே இருந்துதான் வர்றேன். நீங்க செய்தது நியாயமா?" என்றேன். "இந்துமதி;" என்று கோபமானார். "என்ன சொல்லப் போறீங்கன்னு தெரியும். நான் கிளம்புறேன். ஆனா, நீங்க செய்தது தப்பு" என்று சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன்.

கேள்வி - அதன்பிறகு சந்தித்தீர்களா?

பதில் - அதற்கு பிறகு ஜெயலலிதாவுடன் நேர் சந்திப்புகள் என்பது கிடையாது. அவ்வப்போது போனில் பேசிக்கொண்டதுதான்.

கேள்வி - கருணாநிதியுடனான நட்பு பற்றி;

பதில் - கலைஞர் மிக பிரியமானவர். எங்கள் வீட்டுக்கு வருவார். படித்த புத்தகங்கள் பற்றி பேசுவார், நான் படித்த புத்தகங்கள் பற்றி கேட்பார். "முரசொலி படி" என்று சொல்லிக்கொண்டே இருப்பார். "எனக்கு முரசொலி பிடிக்காதுங்க" என்று அவரிடமே சொன்னேன். அவரடைய 'நெஞ்சுக்கு நீதி' நூல் கொடுத்தார். அவருடைய பேனாவைக் கேட்டேன். "என் பேனாவை யாருக்கும் தரமாட்டேன்" என்று முதலில் மறுத்தார். ஒவ்வொரு முறையும் கேட்பேன், "கொடுக்க மாட்டேன், கொடுக்க மாட்டேன்" என்று மறுத்துக் கொண்டே இருந்தார். "உங்கள் பேனாவை வாங்கிவிட்டால் உங்கள் அறிவை வாங்கிவிட்டதாக அர்த்தம் இல்லை. உங்கள் மீதான பிரியத்தால் கேட்கிறேன். உங்களிடம் வேறு எதுவும் கேட்கவில்லை. பேனா மட்டும்தான் கேட்கிறேன்" என்று சண்டை போட்டேன். அப்புறம் கொடுத்தார்.

கேள்வி - கருணாநிதியுடன் அரசியல் பேசுவீர்களா?

பதில் - ஐய்யய்யோ; அந்தளவு எனக்கு அரசியல் நிபுணத்துவம் கிடையாது. அவருடைய சாணக்கியத்துவத்துக்கு முன்னால் நான் என்ன பேசிவிட முடியும். இலக்கியம் மட்டும்தான் பேசுவோம். ஜெயலலிதாவுடனும் அப்படித்தான். அரசியல் கிடையாது, புத்தகங்கள் பற்றி மட்டுமே பேசுவோம்.

நான் பேசியது வரைக்கும், கலைஞருக்கு தற்கால இலக்கியம் அவ்வளவாக பிடித்தம் இல்லை. ஆனால், எல்லாம் படிப்பார். இன்றைய சுஜாதா, பாலகுமாரன் எல்லாம் அவருக்கு விருப்பம் இல்லை. ஜெயகாந்தன் பிடிக்கும். வாலி பற்றி, கண்ணதாசன் பற்றி, குமுதம் பற்றி, குங்குமம் பற்றி, அவருடைய எழுத்துகள், பேச்சுகள் பற்றி எல்லாம் நாங்கள் பேசியிருக்கிறோம்.

கேள்வி - உங்கள் எழுத்துகள் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்?

பதில் - என்னுடைய புத்தகம் ஒன்றுக்கு கலைஞர் முன்னுரை கொடுத்துள்ளார். என் 'தரையில் இறங்கும் விமானங்கள்' படித்துவிட்டு, "நல்ல பாப்பார நடையில் எழுதியிருக்கே" என்றார். "பாப்பாத்தி பாப்பார நடையில்தானே எழுதுவேன்" என்றேன். "ஆனால், கருத்துகள் பிரமாதம், ரொம்ப நல்லாயிருக்கு" என்றார்.

கேள்வி - ஜெயலலிதாவுடனான உங்கள் நட்பு பற்றி கருணாநிதிக்கு தெரியும். அது பற்றி எதாவது சொல்லியிருக்கிறாரா?

பதில் - ஒன்றுமே சொன்னதில்லை.

கேள்வி - எம்.ஜி.ஆருடனும் உங்களுக்கு நல்ல நட்பு இருந்திருக்கிறது!

பதில் - எனக்கு தெரிந்த எம்.ஜி.ஆர். மிக கண்ணியமானவர். ஜெயலலிதா வழியாகத்தான் எம்.ஜி.ஆர்.உடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. எனவே, எம்.ஜி.ஆருடனான சந்திப்புகள், பேச்சுகள் எல்லாவற்றையுமே நான் ஜெயலலிதாவிடம் சொல்லிவிடுவேன். "இன்று கூப்பிட்டார், ஆபிஸுக்கு வரச் சொல்லியிருக்காங்க, இதைப்பற்றிக் கேட்டார்" என எல்லாவற்றையும் பகிர்ந்துவிடுவேன். ஆனால், ஜெயலலிதா, "நீ எம்.ஜி.ஆரைப் பார்க்க போய் வருவதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் கிடையாது, இந்துமதி. உன்னை எனக்கு நல்லா தெரியும். எனவே, உன்னைப் பற்றி எனக்கு எந்த பயமும் கிடையாது" என்பார். ஆனாலும் நான், "இல்லைங்க, உங்களிடம் சொல்லாமல் நான் போகவும் மாட்டேன், அவருடன் பேசவும் மாட்டேன்" என்று எல்லாவற்றையுமே சொல்லிவிடுவேன்.

யாருடன் நான் பழகினாலும் அவர்கள் வீட்டில் உள்ளவர்களுடனும் நான் பழகிவிடுவேன். எந்த ஆணாக இருந்தாலும் அவரது மனைவி, சகோதரி, அம்மா என அந்த வீட்டில் உள்ள பெண்கள் அனைவருடனும் நான் பழக்கம் ஏற்படுத்திக் கொள்வேன். அது எனக்கும் பாதுகாப்பு, என் பெயருக்கும் பாதுகாப்பு.



அப்படி எம்.ஜி.ஆருடன் பழகும்போது அவரது மனைவி ஜானகி அம்மாவுடனும் எனக்கு நல்ல நட்பு ஏற்பட்டது.

கேள்வி - எம்.ஜி.ஆர். மனைவி வி.என். ஜானகியுடனும் நட்பாக இருந்திருக்கிறீர்கள். அவர்கள் எப்படி?

பதில் - நான் பழகிய அரசியல் தலைவர்களில் மிக நெருக்கமாகவும் மனதோடு மனதாகவும் பழகியது ஜானகி அம்மாவுடன்தான். என் மனதும் அவர்கள் மனதும் அப்படி ஒட்டிப் போனது. எல்லாமே என்னிடம் சொல்வாங்க. என் மடியில் படுத்து மனம் விட்டு என்னிடம் அழுதிருக்காங்க. "என் தலையில் நானே மண் அள்ளிப் போட்டுக்கொண்டேன். என் தலையில் நானே நெருப்பு அள்ளிக் கொட்டுக்கொண்டேன்" என்று அந்தக் கதையெல்லாம் சொல்லியிருக்காங்க.

எம்.ஜி.ஆர். வள்ளல் என்று சொல்வாங்க அதைவிட பெரிய வள்ளல் ஜானகி அம்மாதான். என் அனுபவத்தில் ஒரு சம்பவம் சொல்கிறேன். என் உறவினர் ஒருவருக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ஒரு மருந்து தேவைப்பட்டது. "இது இங்கே கிடைக்காது. ஆனால், எம்.ஜி.ஆருக்காக வாங்கியிருந்தோம். எனவே, அவர்கள் வீட்டில் இருக்கும்" என்று டாக்டர் செரியன் சொன்னார். இது எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின்னர், ஜானகி முதலமைச்சராகவிருந்த அந்த 13 நாட்களில் நடந்தது. அப்போது அதிகாலை 3மணி. ஆனாலும், உடனே ஜானகி அம்மாவுக்கு போன் செய்தேன். தூங்கிக் கொண்டிருந்தாங்க. ஆனாலும் உடனேவந்து, "என்ன வேண்டும்" என்று கேட்டார். "வாங்க கொடுக்கிறேன்" என்றார். அத்தனை மருந்தையும் அள்ளிக் கொடுத்தாங்க.

கேள்வி - ஜெயலலிதாவை வி.என். ஜானகி எப்படி பார்த்தார். அவர் குறித்து உங்களிடம் பேசியிருக்கிறாரா?

பதில் - கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜானகி அம்மா, ஜெயலலிதா, மூப்பனார் என எதிரும் புதிருமாக இருந்த அன்றைய முக்கியமான தலைவர்கள் எல்லோரிடமும் அரசியல் கடந்து என்னால் பழக முடிந்ததுக்கு ஒரே காரணம், நான் யாரைப் பற்றியும் யாரிடமும் கேட்டது இல்லை. ஒருவர் சொன்னதை சம்பந்தப்பட்டவரிடம் பகிர்ந்துகொண்டதில்லை என்பதால்தான். யாரோட வருத்தங்களையும் யார் திட்டியதையும் யாரோடும் காட்டியதில்ல.

கேள்வி - இத்தனை அரசியல் தலைவர்களுடன் பழகியிருக்கிறீர்கள். நீங்கள் ஏன் அரசியலுக்கு வரவில்லை?

பதில் - பொதுவாக எழுத்தாளர்கள் அரசியலுக்கு சரிப்பட்டு வரமாட்டார்கள். என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். வாலி மாதிரி சண்டை போடக்கூடியவர்கள், கண்ணதாசன் மாதிரி எதிர்த்து நிற்பவர்கள், ஜெயகாந்தன் மாதிரி போர்க்குணம் கொண்டவர்கள் என சிலர் இருக்கிறார்கள்தான். ஆனால், பெரும்பான்மை கலைஞர்கள் அப்படிக் கிடையாது. அரசியலைக் கவனிக்கிறோம். அரசியல் என்றால் என்ன? அரசியலில் என்ன நடக்க வேண்டும், என்ன நடக்கக்கூடாது? எல்லாம் எங்களுக்கு தெரியும். ஆனால், அரசியலில் எந்த மாற்றத்தையும் எழுத்தாளர்களால் செய்து விடமுடியாது. களத்தில் இறங்கி பணியாற்றியும் கண்ணதாசன், ஜெயகாந்தனால்கூட தமிழக அரசியலில் எதுவும் செய்துவிட முடியவில்லையே.

காங்கிரஸ் சார்பாக என்னை தேர்தலில் நிற்க வைக்கவேண்டும் என்று மூப்பனார் முயற்சித்தார். வீட்டுக்கு அடிக்கடி வருவார். காவேரி தண்ணீருக்காக ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்தபோது நான் டில்லியில் இருந்தேன். அப்போது அழைத்த மூப்பனார், "அம்மா உடனே கிளம்புங்க. உங்க ஃபிரண்ட் சென்னையில கடற்கரையில உண்ணா விரதம் இருக்காங்க" என்றார். "உடனே டிக்கெட் கிடைக்காதே" என்றேன். "நான் போட்டுத் தாறேன், உடனே கிளம்புங்க" என்று டிக்கெட் எடுத்துகொடுத்து அனுப்பி வைத்தார். ஆனால், "அரசியல் எனக்கு பொருந்தவே பொருந்தாது, தெரியவும் செய்யாது. எனக்கு அரசியல் வேண்டவே வேண்டாம்' என்று மூப்பனாரிடம் உறுதியாகச் சொல்லிவிட்டேன். ஆனாலும் வற்புறுத்திக்கொண்டே இருந்தார். இதனால், அவர் வீட்டுக்கு வரும்போது, முன் வாசலில் அவர் வருவது தெரிந்த உடனே நான் இன்னொரு வாசல் வழியாக வெளியே ஓடிவிடுவேன்.

தொடரும்...



Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front  2025-06-30  5:28 PM  Page 8



## நாமும் நமது இல்லமும் 680

# அலுவலக கட்டிடம் வாடகை மனையாக மாறுகின்றது



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடாவின் ரொறொன்ரோ பகுதியில் டொன்மில்ஸ் & எகிலின்ரன் (DonMills & Eglinton) பகுதியில் கடந்த 40 வருடங்களிற்கு மேலாக முற்றாக அலுவலக வாடகைக்காக கொடுக்கப்பட்டிருந்த கட்டிடம், இன்று குறிப்பாக கொரோனா பெருந்தொற்றுக்கு (2020ஆம் ஆண்டிற்கு) பிற்பாடு 80%ஆன அலுவலகப் பகுதி வாடகைக்குக் கொடுக்கப்படாமல் வெற்றிடமாக (Vacancy) உள்ளது.

வீட்டிலிருந்து தொழில்புரியலாம் என்று சகல நிறுவனங்களும் முடிவு எடுத்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

1976இல் கட்டப்பட்ட இந்த 15 மாடி அலுவலக கட்டிடம் (Apartment Units) 331 அலகுகள் கொண்ட மக்கள் வாழும் இடமாக மாற்றப்படுகின்றது. இதில் இரண்டு (2) மற்றும் மூன்று (3) அறைகளாக மாற்றப்படுகின்றது.

இந்தப் பகுதி ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் உள்ளது. மற்றும் மார்க்கம் (Markham) பகுதியிலிருந்தும் இலகுவாக அடையக்கூடியது.

அதிகளவு பசுமையான பகுதிகளைக் (Green Area Park) கொண்டது. அத்துடன் Don Riverஉம் உள்ளது. புதிதாக அமைக்கப்படும் Crosstown LRT மற்றும் Ontario Line Subway இதற்கு அருகில் அமைக்கப்படுகின்றது. இக் கட்டிடத்தை வாடகைக்குப் பெற அதிகமான மக்களின் விருப்பம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் 2024-2025ஆம் ஆண்டுகளில் Office Buildings, வாழும் பகுதியாக மாற்றப்படுவது இயல்பாகியுள்ளது. இதற்கு மூன்று அரசுகளும் ஊக்கத் தொகை வழங்குகின்றன.

குறிப்பு: பொதுவாக ரொறொன்ரோவில் உள்ள கட்டிடம் சம்பந்தமாக பொருட்கள் விற்கப்படும் கடைகளில் அதிகளவு திருத்த வேலை செய்யும் ஒப்பந்தக் காரர்களை (Contractors) காணக் கூடியதாக உள்ளது.

### வாடகை Vs உரிமைகொள்ளல் (Rent Vs Ownership)

வாடகைக்குப் பெறக்கூடிய தகைமை இருந்தால், குறிப்பிட்ட பணத்தில் முதலீட்டுடன் சொந்த வீடு அல்லது ஆதனம் வாங்க முடியும் எனில் வாழ்வதற்காக முதல் தடவை ஆதனம் வாங்குவது நீண்ட காலத்தில் சிறப்பாகும்.

1, உரிமை கொள்வதால் வாடகை அதிகரிப்பு என்ற நிலைமை கிடையாது.
2, விருப்பத்திற்கேற்றவாறு நிறம், பூச்சு செய்யலாம்.
3. மாதாந்த கொடுப்பனவில் ஒரு பகுதி முதலீடாக மாறுகின்றது.
4, அரசின் GSTS விலக்கீடு கவனத்திற்கு உரியது.

Government Rebates
(அரசின் சலுகைகள்)
Tax Credits
Tax Savings
Mortgage Savings
Land Transfer Tax Rebates
First time Home buyers Credit
RRSP Home buyers plan

### GTAஇல் அடுக்குமனை (Condo. Units) எண்ணிக்கை (Q4)

| | |
|---|---|
| 2015 | 50,585 |
| 2016 | 52,460 |
| 2017 | 56,978 |
| 2018 | 68,157 |
| 2019 | 77,404 |
| 2020 | 81,398 |
| 2021 | 91,356 |
| 2022 | 104,751 |
| 2023 | 99,105 |
| 2024 | 78,742 |
| 2025 | 48,742 |
| 2026 | 28,742 |
| 2027 | 13,242 |
| 2028 | 3,742 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டியதுபோல 2022ஆம் ஆண்டில் அதிகளவு மனைகள் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது அல்லது தொடங்கப்பட்டு இருந்தது.

இவை நிர்மாணிக்கப்பட்டு கடந்த வருடம் (2024) மற்றும் 2025 அதிகளவு மனைகள் மக்களிற்கு கையளிக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக நிர்மாணிக்கப்பட இருக்கும் அலகுகள் 2026, 2027 மற்றும் 2028இல் எண்ணிக்கைகள் குறைவதனைக் காணலாம்.

2028இற்கு பிற்பாடு விலையிலும் வியாபாரத்திலும் ஏறுமுகம் எதிர்பார்க்கலாம். சந்தர்ப்பத்தைப் பாவிப்பது சிறப்பு ஆகும்.

### ஆதனம் பற்றி தெரிந்திருக்க வேண்டியவை:

இடைநிலை (Median) விலை $1.2 மில்லியனான ரொறோன்ரோ பெரும் பாகத்தில் உள்ள புதுப்பிக்கப்பட்ட (Renovated) ஆதனங்கள், புதுப்பிக்கப்படாத ஆதனங்களைவிட $48,000 அதிகமாக விற்கப்படுவதனைக் காணக் கூடியதாக உள்ளது. இடைநிலை விலையும் (Median), சராசரி விலையும் (Average) வித்தியாசமானவை.

இடைநிலை (Median) விலை என்பது உதாரணமாக ஒன்பது (9) ஆதனங்களை குறைந்த விலையிலிருந்து கூடிய விலைக்கு ஒழுங்குப்படுத்தும்போது, நடுவில் உள்ள விலையே இடைநிலை விலை (Median Price) எனப்படும்.

64% ஆதனம் வாங்குபவர்கள் புதுப்பிக்கப்பட்ட (Renovated) ஆதனங்களையே விரும்புகின்றனர்.

பொதுவாக குளியல் அறைகளும் (Washrooms) மற்றும் குசினி (Kitchen) போன்றவை திருத்தப்பட்டதனையே முதல் ஐந்திற்குள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

புதுப்பிக்கப்பட்ட ஆதனங்கள் ரொறொன்ரோவில் 7% அதிகமான விலைக்கு ($89,000) விற்கப்படுகின்றது.

2023இலிருந்து குறைந்தது 66%ஆன வீடுகள் ஏதோ வகையில் திருத்தப்பட்டே விற்கப்படுகின்றன.

2025இன் முதல் கால்பகுதியில் (Q1 - 2025) ஏறக்குறைய 20,000 புதியவர்களே கனடாவிற்கு வந்துள்ளனர். கடந்த ஐந்து (5) வருடங்களின் முதல் கால்பகுதியில் கனடாவிற்கு வந்தவர்கள் 220,000 (ஏறக்குறைய), இதனாலும்கூடிய வாடகைக்குரிய ஆதனங்களும், வாடகைக்குத் தகுந்தவர்களை தேர்ந்து எடுப்பதில் 2025ஆம் ஆண்டில் சிக்கல் உள்ளது. மற்றும் வாங்குபவர்களின் எண்ணிக்கையும் குறைகின்றது.








சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 6

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

## Life Coaching

ஒருவன் தனது வாழ்க்கையை சுய பரிசோதனைக்கு உட்படுத்தாவிட்டால் அந்த வாழ்வை வாழ்வதற்கே அவன் தகுதியற்றவனாகிறான் என்று கிரேக்க அறிஞர்கள் சாக்கரடிஸும், தன்னைத் தானே அறிந்து கொள்வதுதான் அனைத்து ஞானத்திற்கும் ஆரம்பமாகும் என்று அரிஸ்டாட்டிலும் நமக்கு எடுத்துரைக்கின்றனர்.

நமது வாழ்வில் நடந்த நடக்கும் சம்பவங்களை திரும்பவும் புரட்டிப் பார்த்தல் என்பது நமது இதயத்தின் விளக்கினைப் போன்றது. இச்செயலை திரும்பத் திரும்பச் செய்யாவிடில் நமது இதயத்தில் எந்த ஒளியும் மிஞ்சி இருக்காது.

நம் வாழ்வனுபவங்களின் எதிரொலிதான் இத்தகைய பரிசீலித்தல் ஆகும். நமது அனுபவங்கள் நம் ஆன்மாவை உருவாக்கும் சிற்பிகளாகும். நமது வாழ்வின் மிகப்பெரிய தவறு என்பது இதை உணராமல் இருப்பதுதான். நம்மில் அநேகர் இத்தவறை திரும்பத் திரும்ப செய்துகொண்டே இருக்கிறோம். சுய பரிசோதனை என்பது நமது தோல்விகளில் இருந்து மட்டுமல்ல நமது வெற்றிகளில் இருந்தும் புதுப்புது பாடங்களை நமக்குக் கற்றுத் தரும். இத்தகைய சுய பரிசோதனை அல்லது தன்னைத்தானே தொடர்ந்து பரிசீலித்துக்கொண்டே இருப்பது என்ற செயலை ஒரு கடமை யாக தன் வாழ்வில் கடைப்பிடிப்போர் மட்டும்தான் தாம் விரும்பும் லட்சியத்தை அடைகின்றனர்.

நம்மில் பலருக்கு இருக்கும் மற்றொரு பெரிய குறை என்னவென்றால் என் வாழ்வில் உண்மையிலேயே எனக்கு என்ன தேவை, எனது லட்சியம் என்ன என்ற குறிக்கோளே இல்லாமல் வாழ்வை நடத்திக் கொண்டே சென்று விடுவதுதான். சிறிது யோசித்துப் பார்த்தோமானால் இதை நாம் நன்கு உணர்வோம். நமது வாழ்க்கை மற்றவர் போட்டு வைத்த பாதையில் நடந்து செல்வதே ஆகும்.

மற்றவர் என்பது என்னவென்று நான் ஏற்கனவே விரிவாகக் கூறியுள்ளேன். நமது பெற்றோரில் ஆரம்பித்து சமூகத்திலும், என் நாட்டிலும் இவ்வுலகத்திலும் அது முடிகிறது. இந்த மற்றவர்களின் பாதைகள் நமக்கு எந்தவித சந்தோஷத்தையோ, திருப்தியையோ தருவதில்லை ஆயினும் ஒரு புதிய பாதையை நிர்மாணிக்க நமக்கு முனைப்பும், முயற்சியும் இல்லை. இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்வதே இல்லை. நாம் யார் என்பதை முழுமையாக புரிந்துகொள்ள முதலில் நாம் சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நமது கல்வி நிலையங்களோ நாம் சுயமாக சிந்திப் பதை எப்படியாவது தடுக்கவே முனைகின் றன. நான் சொல்வதைக் கேள் என்று கூறியே நமது பெற்றோரும், ஆசிரியர் களும், மற்றவர்களும் நம்மை வளர்க்கின்றனர்.

சுய பரிசோதனை என்பது மிகவும் பணிவுடன் நம்மை நாமே உற்று நோக்கும் ஒரு செயல்முறை ஆகும். நாம் ஏன் இவ்வாறு சிந்திக்கிறோம், எதனால் இவ்வாறு பேசுகிறோம், என் செயல்கள் எதன் அடிப்படையில் இருக்கின்றன, நாம் இப்படி நடந்து கொள்வதற்கு என்ன காரணங்கள் என்பதை நாம் புரிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்தப் பயிற்சியை நாம் மேற் கொள்ளாவிட்டால் நம் வாழ்க்கை செக்கு மாடு சுற்றி வருவதுபோல ஒரே மாதிரி யாகத்தான் சென்று கொண்டு இருக்கும். அனைத்து நேரங்களிலும் நாம் மற்றவர் களின் செயல்பாடுகளையே பார்த்துக் கொண்டும், அவர்களை விமர்சித்துக் கொண்டும் நம் வாழ்க்கையைக் கோட்டை விட்டு விடுகிறோம். நம்மை நாமே உற்று நோக்குதல் மட்டுமே நம்மை மற்றவர்கள் அனைவரும் வாழும் வாழ்க்கையில் இருந்து பிரித்து நமது வாழ்க்கையின் லட்சியத்தை அடையும் பாதைக்குக் கொண்டு செல்லும்.

நமது வாழ்க்கையை நாம் எவ்வாறு பார்க்கிறோம் என்பது மாதிரியேதான் நமது வாழ்க்கையும் முடிவில் அமைந்து விடுகிறது. நமது வாழ்வு அமையும் முறையை நாம் மற்றவர்கள் கையில் கொடுத்து விடுகிறோம். முடிவில் நாம் தெரிவு செய்யாத நல்ல வாய்ப்புகளையும், மேன்மையான உறவுகளையும், தள்ளிப் போட்டுக் கொண்டே சென்று விட்ட முடிவுகளையும் குறித்து வயதான காலத்தில் வருத்தப்படுவதில் சென்று நம் வாழ்க்கை முடிகிறது.

நமது நல்வாழ்வு பயிற்சியாளருடைய வாடிக்கையாளரின் கதையை சற்று நினைவு கூருகிறேன். எந்த சுய பரிசோதனையும் இல்லாத ஒரு வாழ்க்கை யைத்தான் அவர் நடத்திக்கொண்டு இருக்கிறார். மற்றவர்களின் அபிப்பிராயங் களுக்கு கிட்டத்தட்ட அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால் அவரது வாழ்வு சலிப்பும் வெறுமையும் நிறைந்த தாக இருக்கிறது. இந்நிலைக்கு அவராகவே சில காரணங்களை கற்பிதம் செய்து கொண்டிருக்கிறார். அக்காரணங் களின் அடிப்படையை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நல்வாழ்வு பயிற்சி என்பது இத்தகைய புரிதலை, அப்புரிதலின் அவசியத்தை பயிற்சியாளர் வாடிக்கையாளருக்கு சிறிது, சிறிதாகக் கற்பிப்பது ஆகும். நல்வாழ்வு பயிற்சியாளர் ஓர் ஆசிரியர் நிலையில் இல்லாமல் வாடிக்கையாளரின் கையைப் பிடித்து நடத்திச் செல்லுபவராக இருக்கிறார். பயிற்சியாளரும் கூடவே நடக்கிறார் என்பதை இங்கு கவனியுங்கள். இந்தப் பயிற்சியில் வாடிக்கையாளர் மட்டும் கற்றுக் கொள்பவர் அல்ல. பயிற்சியாளரும் ஒரு புதிய வாடிக்கையாள ரின் ஆளுமையில் உள்ள நுட்பங்களைக் கண்டுபிடிக்கிறார். இது நல்வாழ்வு பயிற்சியாளருக்கும் ஒரு புது அனுபவமாக வும் பாடமாகவுமே இருக்கும். இருவருமே பயிற்சியில் பயனடைகின்றனர்.

நமது வாழ்க்கையை பின்னோக்கிப் பார்ப்பது மட்டுமே அதைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கிறது. அப்படிப் பார்த்து பரிசீலித்தால் மட்டுமே நம்மால் வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல முடியும். முன்னேறிச் செல்லவும் வேண்டும்.

நல்வாழ்வு பயிற்சியின் சில அடிப்படை யான தத்துவங்களை இப்பகுதியில் நான் எடுத்துக் கூறியுள்ளேன். மீண்டும் சந்திப்போம் நண்பர்களே!

# புலம்பெயர் அடையாளம்



க. முத்துராஜா

கடந்த கோடையில் ஒரு சனிக்கிழமை அன்று கனடா-ரொறொன்ரோவின் ஒரு குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதியில் கோடைகால ஒன்றுகூடல் நடைபெற்றது.

பத்து மணியளவில் தேநீர் கோப்பி சிற்றுண்டி வகைகளுடன் கொண்டாட்டம் தொடங்கப்பட்டது. மதியத்தில் சுடப்பட்ட பலவகை இறைச்சி வகைகளுடன் பாண் குளிர்பானம் என்பன வயிற்றை நிரப்பின. பிள்ளைகள் மகிழ்ச்சியாகப் பலவித விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தப் புல்வெளியின் மத்தியில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலில் ஏறியும் குதித்தும், பலகையில் இருந்தபடி, உயர்ந்து பதிந்து ஆடியும், குழாய் களுக்குள் நுழைந்து சறுக்கி வெளியேறி யும், குழந்தைகள் குதூகலித்துக் கொண்டிருந்தனர். பெற்றோர் அவர்களைக் கண்காணித்தபடி உலாவித் திரிந்தனர்.

நிறுத்தப்பட்ட ஏறத்தாழ ஆறு அடி உயரமான, கறுப்பு நிறத்தில் இரண்டு ஒலிபெருக்கிப் பெட்டிகள் இனிய பாடல்களையும் மேளதாள இசைகளையும்



பொழிந்து தள்ளின.
மேளதாளம் பாடல் என்பனவற்றின் அழகியலில் கரிபியத் தீவுகளின் கிராமியப் பாடல் கூறுகளும் கலந்திருந்தன. அவற்றின் வேர் ஆபிரிக்க இந்திய மரபு இசைப் பண்களைத் தொட்டுக் காட்டின.

ஆபிரிக்கர், ஆபிரிக்க இந்திய கலப்பினர், சீனர், செவ்விந்தியர், ஸ்பானியர், வட ஆசியர், இலங்கையர், இந்தியர் முதலிய பலவகை முகங்கள் அங்கே பரவலாகக் காணப்பட்டன. வேறு வேறுவித நாகரிகப் பாணிகளில் பெண்களின் கூந்தல் அலங்காரக் கட்டமைப்புகள் தென்பட்டன.

பூமிப்பந்தின் எங்கெங்கெல்லாம் இருந்து வந்து குடியேறிய மக்கள் ஒருவித கலப்பின பறவைக் கூட்டமாக முகிழ்ப்பெய்திக் காணப்பட்டனர். அவர்களுக்குள் மானிடத்தின் ‘எக்காள மகிழ்ச்சி’ தென்பட்டது. நாங்கள் இந்த ஊரில் வாழ்கின்ற ஒரே மனித மக்கள் கூட்டம் என்ற உள்ளுணர்வுடன் அவர்கள் தமது கொண்டாட்டத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அவர்களின் ஆங்கில உரையாடலின் ‘திரிபுபட்ட’ ஒலிக்கூறுகள் மொழியியலாளரின் ஆய்வுத் தேடலை சிறிது சிந்திக்க வைத்தது.

நிகழ்வின் இறுதி நிகழ்ச்சி நிரலாக வெள்ளை இனப்பெண் ஒருவர் ஒலிவாங்கியில் அறிவிக்க அறிவிக்க, விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர் களுக்கான பரிசுப் பொருட்களை அங்குள்ள தற்காலிக மேடையில் வைத்து இன்னொரு ஆபிரிக்க இனப்பெண் வழங்கிக் கொண்டிருந்தார். பின்னேரம் ஐந்து மணியளவில் கூடாரங்கள் மேடை



முதலியன கழற்றப்பட்டன. பெற்றோர்கள் மகிழ்ச்சியான முகத்துடன் தமது குழந்தைகள் பிள்ளைகளுடன் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# நானிலம் போற்றும் நட்பு - 69



– அகணி –
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதி என்ற நூலில் நட்பு பற்றி வரும் கருத்துகளையும் உரையாடலுக்கு எடுத்துக் கொள்வோம். 'ஏலம்' என்பது ஆதியான ஆறு பொருள்கள் சேர்ந்த ஒரு வகை மருந்து. 'ஏலாதி' என மருத்துவ நூல்களில் கூறப்பெறும். ஏலம் ஒரு பங்கு, இலவங்கப்பட்டை இரண்டு பங்கு, நாகேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு என்ற அளவுப்படி சேர்த்து இம்மருந்தினை உருவாக்குவர். ஏலாதி நூலும் ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்களைப் பெற்று, உயிருக்கு உறுதுணையாக அறநெறியை விளக்கி உரைக்கும் தன்மை பெற்றமையால் இப்பெயரைப் பெற்றுள்ளது. இந்த நூலின் ஆசிரியர் கணிமேதாவியார். கணிமேதை என்றும் இவர் அழைக்கப்பட்டார். இந்த நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக எண்பது பாடல்கள் உள்ளன. இதில் மிகவும் அரிதாகவே நட்பு பற்றி பேசப்பட்டுள்ளது. உரையாசிரியர் பால சங்கரன் அவர்களின் உரையின் உதவியோடு இந்த நூலில் உள்ள நட்புப் பற்றிய கருத்துக்களையும் கவனிப்போம்.

இப்பொழுது ஏலாதியில் உள்ள முப்பத்தி மூன்றாவது பாடலைக் கவனிப்போம்.
"பொய் உரையான், வையான், புறங்கூறான் யாவரையும்,
மெய் உரையான், உள்ளனவும் விட்டு உரையான், எய் உரையான், -
கூந்தல் மயில் அன்னாய்! - குழீஇய வான் விண்ணோர்க்கு
வேந்தனாம் இவ் உலகம் விட்டு."

'வையான்' என்றால் எவனையும் இகழான் என்றும் 'விட்டு உரையான்' என்றால் வெளிப்படுத்தி சொல்வான் என்றும் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

"மயில் தோகை போன்ற கூந்தலை உடையவளே! பிறர் தீங்கு கருதி பொய் பேசாமலும், இகழாமலும், தனக்குத் தீமை செய்தவர்களை அவமதித்துப் பேசாமலும், ஒருவருக்கு ஏற்பட்ட தீமையினை போக்குவதற்காக நடந்த உண்மைகளைச் சொல்லாமலும், தன்னிடத்தில் உள்ள பொருள்களையும், தன் நண்பர்களிடம் வறுமையும் சொல்லாது இருக்கும் ஒருவன், இந்த உலகத்தை விட்டு வானுலகிற் கூடியுள்ள தேவர்கட்குத் தலைவனாவான்" என்பது ஏலாதி பாடலுக்கான பொருளாகும்.

தனது நண்பர்களிடம் வறுமையும் சொல்லாதிருக்கும் ஒருவன் இந்த உலகத்தை விட்டு வானுலகிற் கூடியுள்ள தேவர்கட்குத் தலைவனாவான்" என்ற நட்பு பற்றிய கருத்து இந்தப் பாடலில் பொதிந்துள்ளது.

இப்பொழுது ஏலாதியில் உள்ள நாற்பத்தி ஏழாவது பாடலைக் கவனிப்போம்.

"பெரியார் சொல் பேணி, பிறழாது நின்று,
பரியா அடியார்ப் பறியான், கரியார் சொல்
தேறான், இயையான், தெளிந்து அடிசில் ஈத்து உண்பான் -
மாறான், மண் ஆளுமாம் மற்று."

'பறியான்' என்றால் வெறித்து நிற்காமலும் என்றும், கரியார் சொல் என்றால் வஞ்சகர் சொற்களை என்றும் உரையாசிரியர் கூறியுள்ளார்.

"ஒழுக்கத்திற் பெரியோரது உறுதி மொழியைப் போற்றி, அவ்வொழுக்கத்திலிருந்து வழுவாது, தன் பணியாட்கள் மேல் விருப்பமும் வெறுப்பும் இல்லாமலும், வஞ்சகர்கள் சொற்களை நம்பாமலும், அவர்களோடு நட்பு கொள்ளாமலும், வாழ்க்கையின் பயனை ஆராய்ந்துணர்ந்து, விருந்தினர் முதலியவர்க்கும் படைத்துத் தானும் உண்பவன் தவறாமல் நாடாள்வான்." என்பது இந்த ஏலாதி பாடலுக்கான பொருளாகும்.

இந்தப் பாடலில் நட்பைத் தவிர்க்க வேண்டிய சூழல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது ஏலாதியில் உள்ள அறுபத்தி எட்டாவது பாடலைக் கவனிப்போம்.

"சாதல், பொருள் கொடுத்தல், இன்சொல், புணர்வு உவத்தல்,
நோதல், பிரிவில் கவறலே, ஓதலின்
அன்புடையார்க்கு உள்ளன ஆறு குணம் ஆக,
மென்புடையார் வைத்தார், விரித்து".
இன்சொல் என்றால் இன்சொல் கூறுதலும் என்றும் ஆறு குணம் என்றால் ஆறு இயல்புகளும் என்று உரையாசிரியர் கூறியுள்ளார்.

"நண்பர்கள் இறந்தவுடன் தாமும் இறத்தலும், நண்பர்களுக்குப் பொருள் கொடுத்தலும், இனிய சொற்களைப் பேசிக் கூடி இருத்தலும், அவர்கள் வருத்தம் அடையும்போது தானும் வருந்தி அவர்களின் பிரிவில் வருந்தி இருத்தலும் ஆகிய இவ்வகை குணம் உடையவர்களே சிறந்த நண்பர்கள் என்று புலவர்கள் கூறுவர்" என்பது இந்த ஏலாதிப் பாடலின் பொருளாகும்.

இந்தப் பாடலில் சிறந்த நண்பர்கள் யார் என்று கூறப்பட்டுள்ளது.

இப்பொழுது ஏலாதியில் உள்ள எழுபத்திஒன்பதாவது பாடலைக் கவனிப்போம்.

"சாக்காடு, கேடு, பகை, துன்பம், இன்பமே,
நாக்கு ஆடு நாட்டு அறைபோக்கும், என நாக் காட்ட,
நட்டார்க்கு இயையின், தமக்கு இயைந்த கூறு, உடம்பு
அட்டார்வாய்ப் பட்டது பண்பு."

கேடும் என்றால் இடையூறும் என்றும், நாக்காட்ட என்றால் நாவினாற் பேசப்படுவன என்றும் உரையாசிரியர் கூறியுள்ளார்.

"சாக்காடும் கேடும், பகையும், துன்பமும், நண்பர்களுக்கு வந்தால் அதனைத் தனக்கு வந்ததாகக் கருதுபவனே சிறந்த நண்பனாவான்." என்பது இந்த ஏலாதிப் பாடலுக்கான பொருளாகும்.

இந்தப்பாடலில் மீண்டும் யார் சிறந்த நண்பன் என்று விளக்கப்பட்டுள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதியில் மூன்று பாடலில் மட்டும் நட்பு பற்றிய கருத்துக்கள் உள்ளன. அவைபற்றி இங்கு உரையாடிக்கொண்டோம்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருநூறாவது பாடலைக் கவனிப்போம்.

இது ஔவையார் பாடிய பாட்டு. கார்காலம் வந்து விட்டது. தலைவன் உறுதிமொழி சொல்லியபடி திரும்பி வரவில்லை. அது கண்ட தலைவி, தன் தோழியிடம் உரைத்தது. இது முல்லைத்திணை சார்ந்தது.

கார்ப்பருவம் வந்துவிட்டது. தலைவி இன்னும் தலைவன் வரவில்லையே என்று வருந்தினாள். அவன் கார்காலத்தில் திரும்பி விடுவதாக உறுதிமொழி கூறிப் போனான். அவன் உறுதிமொழியைக் காப்பாற்றவில்லையே என்றுதான் தலைவி பெருங்கவலை கொண்டாள்.

தலைவியின் கவலையைக் கண்ட தோழி அவளுக்கு ஆறுதல் சொன்னாள். "நீ காண்பது உண்மையான மழைக் காலம் அன்று. மழைக்காலம் போல் பொய்யாகக் காணப்படுகின்றது. உண்மையான கார்காலம் இனிமேல் தான் வரப்போகிறது. அதற்குள் தலைவர் வந்து விடுவார். நீ வீணாகத் துக்கமடைய வேண்டாம்" என்று உரைத்தாள். அதற்குத் தலைவி, இது உண்மையான கார்காலந்தான் என்று சொல்லிக் கார்காலத்தின் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினாள். இதை உரைப்பதுதான் இச்செய்யுள்.

"பெய்த குன்றத்து பூநாறு தண்கலுழ்,
மீமிசைத் தாஅய வீ, சுமந்து வந்து
இழி தரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவாம் நாமே
காலமாரி மாலை மாமழை
இன்னிசை உருமினம் முரலும்
முன், வரல், ஏமம் செய்து அகன்றோரே."

"A real friend is one who walks in when the rest of the world walks out."
- Walter Winchell -

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"தோழியே இதோ பார்! இந்தப் பருவத்தையா கார்ப்பருவம் அன்றென்று சொல்லுகின்றாய். மழை பெய்த குன்றுகளிலிருந்து வெள்ளம் பெருகி ஓடி வருகின்றது. அவ்வெள்ளம் பூமணத்துடன் கலங்கிய நீராக வருகின்றது. அந்தக் கலங்கல் நீரின் மேல் பல மலர்கள் உதிர்ந்திருக்கின்றன. அம்மலர்களையும் அவ்வெள்ளம் சுமந்து கொண்டு வருகின்றது. கார் காலத்து மழையை மாலையிலும் மேகங்கள் பெய்து கொண்டேயிருக்கின்றன. மழையோடு இனிய ஓசையையுடைய இடியும் ஒலிக்கின்றது. இந்தக் கார்காலம் வருவதற்கு முன் வருவேன் நீ அஞ்சாதே, வருந்தாதே என்று எனக்குப் பாதுகாப்பான சொற்களைச் சொல்லிவிட்டுப் போனார். அவர் இப்பொழுது வரவில்லை. நம்மை அவர் மறந்துவிட்டாரோ அறியோம். ஆனால் நாம் மட்டும் அவரை மறக்காமலிருக்கின்றோம்".

இது இச்செய்யுளில் அமைந்துள்ள பொருள். தலைவியின் கூற்றாக அமைந்தது.

இந்தத் தொடர் கட்டுரையில் குறுந்தொகையில் உள்ள இருநூறு பாடல்களில் நட்பு பற்றிய கருத்து வரும் பல பாடல்களை எடுத்து அவற்றில் உள்ள கருத்துகளை விரிவாக ஆராய்ந்தோம். எமது உரையாடலுக்கு சாமி சிதம்பரனார் அவர்களின் நூற்களஞ்சியம் என்ற நூல் மிகவும் உதவியாகவிருந்தது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front 2025-06-30 5:28 PM Page 11



# ‘மண்ணும் மனிதர்களும்’ சிறுகதை தொகுப்பு நூல் மதிப்புரை நிகழ்வு



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி


கனடா - ரொறொன்ரோவில் ஜுன் 15, 2025 மாதம் மாலை 6:00 மணியளவில் GTA வணிக வளாகத்தில் ‘மண்ணும் மனிதர்களும்’ என்ற சிறுகதைத் தொகுப்பு நூலுக்குரிய மதிப்புரை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. நியூசிலாந்தில் வாழ்கின்ற பொறியியலாளரும், தமிழ் அபிமானியுமான யோர்ச் அருளானந்தம் இந்த நூலில் பொதிந்துள்ள ஏழு அழகான சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

நூலாசிரியரின் பல்கலைக்கழக சகபாடியும், நண்பரும், தனது பிறந்த ஊரின் அயல் கிராமத்து குடிமகனுமாகிய, கனடா வாழ், விளம்பரம் ஊடகப் பதிப்பாளர் திரு. ராஜா மகேந்திரன் இந்த நிகழ்வுக்குத் தலைமைத் தாங்கினார். இந்த நிகழ்வை முழுமையாக ஒழுங்குபடுத்தியவரும் திரு. மகேந்திரன் அவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர்களது தலைமையுரையில் நூலாசிரியரின் மாணவப்பருவத்து சமூக அக்கறை பற்றியும், கல்வியில் கொண்டிருந்த மேலதிக திறமைகள் பற்றியும், தமிழ் மொழியில் கதைகள் புனைவதிலிருந்த அதியுயர் ஈடுபாடு பற்றியும் விபரித்தார். இனப்பற்று மற்றும் மிக நேர்த்தியாக சிந்தித்து செயல்படும் அவரது இயல்பாற்றல்கள் பற்றியும் மிக அழகாகவும், உணர்வு பொங்கவும் பேசினார் திரு. ராஜா மகேந்திரன்.

ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் தொடங்கிய இந்த விமர்சனக்கூட்டத்தில் ‘மண்ணும் மனிதர்களும்’ என்ற நூல்பற்றி அருளானந்தத்தின் மற்றுமொரு சகபாடியான பொறியியலாளர் திரு. சிவ ஞான நாயகத்தின் மிகவும் கவனமாகவும், யாவற்றையும் கிரகித்தும் மிக நேர்த்தியாக தனது அறிமுக உரையை நிகழ்த்தினார்.

யோர்ச் எழுதிய ஆறு சிறுகதைகளைக் கொண்ட இந்தச் சிறுகதைத் தொகுப்பு நூல் மட்டக்களப்பில் உள்ள வணசிங்கம் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. திருகோணமலை இலக்சுமி பிரசுராலயம் இதனை வெளியிட்டிருந்தது. நூற்றியொரு பக்கங்களைக்கொண்ட இந்த நூலின் அழகிய அட்டைப்படம் ஆரணி ஞானநாயகனால் அமைக்கப்பட்டது. அட்டைப்பட வடிவமைப்பு ந. ரமணன் செய்திருந்தார். இந்தச் சிறுகதைத் தொகுப்பு நூல் இலங்கையில் இரு வேறிடங்களில் வெளியீட்டு விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது என்று விபரமாகக் குறிப்பிட்டார்.




முகப்புப் பக்கத்தில் யோர்ச்சின் பூட்டனார் றப்பியேல் (1860-1938) சட்டம்பியார் (கோட்டோ) அவர்களது நிழற்படம் அச்சிடப்பட்டு, அவருக்கு இந்த நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், நூலின் இறுதிப் பக்கங்களில் யோர்ச் அவர்கள், அவரது சமூகப் பங்களிப்பை பாராட்டி Queen Service Medal (QSM) என்னும் மகாராணி விருது யோர்ச்சுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் 2012ஆம் வருடத்திலேயே Kiwi Bankஇனால் Local Hero Award என்ற மற்றுமொரு விருதும் வழங்கப்பட்டது. 2022இல் Officer of the New Zealand Order of Merit (ONZM) Investiture என்பதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவை பற்றிய அழகான புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நூலாசிரியர் யோர்ச் ஆசி வேண்டி ஆனையூர் அடைக்கல நாயகி மற்றும் கோண்டாவில் ஸ்ரீபார்வதி அம்மாளினதும் (பாட்டி முறையானவர்) அழகிய வண்ணப்படங்களையும் பிரசுரித்துள்ளார்.

இந்த நூலில் இரண்டு கதைகள் பெண்கள், அவர்களது உணர்வுகள், சூழல், திருமணம் பற்றிய மெல்லிய உணர்வுகளை மையப்படுத்திய கதைகளாகும். நியூசிலாந்திலும், தாய்லாந்திலும் இந்தக் கதைச் சம்பவங்கள் நிகழ்கின்றன. மிக மிக இயல்பாக கதையை யோர்ச் நகர்த்தியுள்ளார். பருவ வயதும், பண்பாட்டுச் சிலுவையின் சுமையும் கதைகளில் விரவிக் கிடக்கின்றன என்கிறார் கவிஞர் ‘காலம்’ செல்வம். கதைகளை மதிப்பீடு செய்தில் அவர் மூன்று தசாப்த கால இலக்கிய பரீட்சயமும், சொற்களின் பின் சுழல்கின்ற வாழ்க்கை நிகழ்வுகளைச் கூர்ந்து பார்க்கும் நுண்ணிய சமூகப் பார்வையும் துல்லியமாக வெளிப்பட்டன.

ஏனைய ஐந்து கதைகளும் தாயகத்தில் நிகழ்ந்த போராட்ட வரலாற்று நிகழ்வுகளையும், அவற்றுடன் பிணைந்தும், நிறைந்தும் கிடக்கும் துன்ப, துயரங்களின் வலியைப் பற்றியனவாகவுள்ளன என்றார் செல்வம். குருதட்சணை என்ற கதை மகாபாரதத்தின் பாத்திரங்களான ஏகலைவன், துரோணர், அர்ச்சுனன், பீஷ்மர் ஆகியோரை மையப் படுத்திய கதையாகும். தன்னை மிகவும் பாதித்த கதை அது என்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த ஏகலைவன் சத்திரிய குல அர்ச்சுனனுக்கு சமமான வில்வித்தை ஆற்றலை பெற்றமை தொடர்பான கதையென விளக்கினார். அவனது பெருவிரலை குருதட்சணையாக கேட்பதில் பொதிந்து இருந்த கீழ்மை உணர்வு, சத்திரிய குல மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதேபோன்ற நிகழ்வுகளும், உணர்வு களும், துரோகங்களும் தாயகப் போராட்ட காலத்திலும் நிகழ்ந்தன என்கிறார் நூலாசிரியர். ஏகலைவனது பிரதிபலிப்பை வேறுவிதமாக மாற்றி எழுதப்பட்ட சிறுதைகளையும் தான் வாசித்ததாக செல்வம் குறிப்பிட்டார்.

யோர்ச்சின் சிறுகதைகள் அவருக்கு சிறுகதை எழுதும் ஆற்றல் எளிதாக கைவரக் கூடியது என்று காட்டுகின்றன. ஆனாலும் யோர்ச் போன்ற புத்திஜீவிகள் இலக்கியங் களை நிறைய வாசிக்க வேண்டும் அப்போதுதான் யதார்த்தம் ததும்பும் சிறுகதைகளை அவர்களால் படைக்க முடியும் என்ற செல்வம் தெளிவுபட விளக்கினார். கவிதை, நாவல், சிறுகதை, விமர்சனம் என்ற புனை இலக்கியப் பரப்பில் செல்வத் தின் கருத்துகள் துல்லியமாயிருந்தன.

சிறுகதைகளை விமர்சனம் செய்த மற்றுமொருவரான மா. சின்னத்தம்பி யோர்ச்சின் சிறுகதைகள் அவரது சுயவரலாற்று அனுபவங்களை ஒட்டியதாக உள்ளது போல் தோன்றுகின்றன. அவரது தனிப்பட்ட வாழ்வு, தொழில் வாழ்வு, சமூக வாழ்வு பற்றிய கண்ணோட்டங்கள் உணர்வுகளின் வழியாக எழுதப்பட்டதுபோல் தெரிகின்றது. அறிவுஜீவிகள் தமது உயர் தொழில் வாழ்க்கையின் இறுதியில் ஏன் இலக்கியத்துறையில் கவனம் செலுத்துகின்றனர் என்பது சிந்திக்க வேண்டியது தான்.

தாயகப் பிரச்சினைகளினால் புலம்பெயர்கின்ற படித்தவர்கள் பல நாடுகளுக்குப் பயணம் செய்கின்றனர். பல பண்பாட்டு முரண்பாடுகளை எதிர்கொள்கின்றனர். பருவ வயதின் முரண்களுக்குள் சிக்குண்டு போகின்றனர். இவற்றை யோர்ச்சின் கதைகள் கசிய விடுகின்றன.

யோர்ச் இலங்கை, தாய்லாந்து, நியூசிலாந்து போன்ற பல நாடுகளில் பெற்ற அனுபவங்கள், கற்ற பாடங்கள் அவரை கதைகளை எழுதும்படி தூண்டியுள்ளன. தங்கள் அனுபவங்களை வரலாறாகவோ, பண்பாட்டுத் துயரங்களாகவோ வெளிப்படுத்தும் வேட்கையும், வேகமும் அவர்களை உந்தித் தள்ளுகின்றன.

ஒருவகையில் பிரசார மாதிரி படைப்புகளாகவும் இவை வெளிப்படுகின்றன. உலகில் ஒடுக்கப்படும் இனங்கள் சுயவரலாறுகளாக எழுதிய பலவும் இனவரலாறுகள் ஆகியுள்ளன.

1760-1789 காலப்பகுதிகளில் கறுப்பின மக்களில் ஐந்து அடிமைகள் தமது சுயவரலாற்றை முதன்முதலாக எழுதினர். இதே போல தாயக மண்ணின் வரலாறுகளை அந்த மக்களே சுயவரலாறாக எழுத முடியும். யோர்ச்சின் சிறுகதைகளும் அந்த வகையினதான்.

உண்மையில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்பு பிறந்த தமிழர் எதிர்காலத்தில் ‘மண்ணும் மனிதர்களும்’ சிறுகதைகளை வாசிக்கும்போது அதிக தாக்கத்தை உணர்வு நிலையில் அவர்களிடம் ஏற்படுத்தலாம்.

யுத்தகாலம் முழுவதுமே தாயகத்தில் தான் வளர்ந்ததால் இக்கதைகள் தனக்கு அசாதாரண மனவெழுச்சியை ஏற்படுத்தவில்லையோ என்று கூறி முடித்தார் சின்னத்தம்பி.

நூலாசிரியரது சுருக்கமான பதிலுரை ஒலியூடகத்தில் தெரிவிக்கப்பட்டதுடன் விமர்சனக் கூட்டம் நிறைவுற்றது.

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215






## BASEMENT FOR RENT

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Couple / students preferred. Close to all facilities. Avail. immediately.
**416.492.6817 /647.403.0893**

**WESTNEY & TAUNTON**
4 Bedrooms & 2 Washrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 2 parking. Close to new spiceland & Nofrills. Student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.402.4121**

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. 1 Min. walk to TTC. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.9644**

**MCCOWAN & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. en trance, Sep. laundry & 1 parking. No smoking & no pets. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.703.8916**

**ROSSLAND & CHURCH (AJAX)**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Rent - $1,650. Nearby bus stop & all facilities. Avail. immediately.
**416.425.3713/647.464.9464**

**MARKHAM & PAINTED POST**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. 1 Min. walk to TTC. Close to Hwy 401 & all facilities. Avail. immediately.
**416.904.1458/6437.443.4764**

**MARKHAM & ELLESMERE**
1 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.701.6282**

**GARDEN & TAUNTON**
3 Bedrooms renovated bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to all amenities. Avail. immediately.
**647.963.0519/647.852.5360**

**MARKHAM & ELSON**
1 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all facilities. Couple /Single preferred. Avail. immediately.
**647.761.8270/416.312.6604**

35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.8086**

**NEILSON & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry. Close to TTC & Eraa supermarket. Avail. August 01, 2025.
**416.292.5871/647.868.5871**

**MAVIS & STEELES - Brampton**
2+1 Bedrooms bsmt for rent. No parking. 5 Min walk to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9923**

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. en trance, parking, laundry & cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.201.6053**

**ROSSLAND & SALEM - AJAX**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Couple prefered. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.980.4779**

**ADELAIDE & STEVENSON**
3 Bedrooms walkout bsmt for rent. Sep. laundry & 2 parking. Close to TTC, Oshawa Centre & all facilities. Avail. July 01, 2025.
தொடர்புகளுக்கு: **437.575.6022**

**CHURCH & ROSSLAND**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 par king. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.241.2190 /647.534.7168**

**MARKHAM & HIGHGLEN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.963.7686**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & EGLINTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & internet. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.575.6022**

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom for rent. Sep. entrance. No parking. No Alcohol & smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.444.2024**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC subway & stores. No laundry. 1 car parking. Avail. immediately.
**Contact: 416.371.8101**

**MARKHAM & LAWRENCE**
3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Sep. entrance, Sep. laun dry & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance & laundry. 1 Min. walk to TTC (133, 53A,953, 939). Non smokers only.
**416.875.3990/905.948.8416**

**BOX GROVE & COPPER CREEK**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, 3 parking & internet. Close to school, bank, walmart & Longos Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.827.1636**

**FINCH & TAPSCOTT**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC, Mall & all facilities. Couple /small family preferred. Avail. July 01, 2025.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

**KENNEDY & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 2 par king.Close to Costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.284.6758**

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to Eraa Supermarket & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**TAUNTON & WHITES**
2 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Family or single female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.918.5065**

**WARDEN & LAWRENCE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to bus stop & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

**EGLINTON & BRIMLEY**
**Scarborough** நகரில் போக்குவரத்து வசதிகளுடன் (TTC) கூடிய 3 அறைகள் கொண்ட Basement வாடகைக்கு உண்டு. Parking & Laundry.
தொடர்புகளுக்கு: **416.317.2358**

**ROSSBANK & FINCH**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.530.9724**

**MARKHAM & DENISON**
3 Bedrooms bsmt for rent. Sep entrance & 1 Parking. Close to Costco, Spiceland & all facilities. Rent-$2000. Avail. immediately.
**647.767.0853/ 647.271.8511**

**MARKHAM & SHEPPARD**
1 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Close to TTC, Centennial College & Shopping facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

**BRIMLEY & EGLINTON**
2 Bedrooms bsmt for rent. Room & Bachelor room also available. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

மேலும் பக்கங்கள் 12, 14, 15, 16

Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front 2025-06-30 5:28 PM Page 13



## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, Shared kitchen & washroom. Famale only. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.451.1365**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. 2 people living together. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.708.3444**

**MARKHAM & EGLINTON**
1 Bedroom for rent in a condo.. Female only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.716.2718 (Whatsapp)**

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
1 Bedroom for rent in a Main floor. வயோதிபர்கள் விரும்பத்தக்கது. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.739.5993**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. No Parking. Close to bus stop (133, 39, 116, 53) & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.262.6616**

**KENNEDY & ELLESMERE**
1 Shared bedroom in upstairs. 1 parking. Male only. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.849.2558**

**MEADOWVALE & ELLESMERE**
Rooms for rent in main floor & basement. parking, Close to 24 hrs. bus service, University & all facilities. Avail. immediately.
**647.531.9668/647.609.4518**

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a 3 bed rooms bsmt. Sharing washroom & Kitchen. Male only. Avail. immediately.
**416.704.4444/416.712.9079**

**WESTNEY & ROSSLAND(AJAX)**
1 Bedroom in a 2 bedrooms bsmt & 1 Bedroom in upstairs. parking. Close to grocery store, Mall & all facilities. Avail. immediately.
**647.425.9798/250.613.8389**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & MCLEVIN**
1 Shared Bedroom for rent in a house. Close to all facilities. Avail. immediately.
**416.720.4472 / 416.875.1211**

**NEILSON & SHEPPARD**
2 Bedrooms for in upstairs. 1 parking. Close to TTC, HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.400.3462**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedrooms for rent in a bsmt. Close to bus stop, S.P. Importers & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.533.9930**

**MORNINGSIDE & FINCH**
1 Bedrooms for rent in a 2 bedrooms bsmt. Separate entrance, No parking. Close to bus stop, grocery & school. Available in July.
**For contact: 416.894.5904**

**MARKHAM & DENISON**
Rooms for rent. 5 Min. walk to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

**WARDEN & ELLESMERE**
1 Large bedroom for rent in a 2 bedrooms bsmt.parking, internet. sharing kitchen & washroom
தொடர்புகளுக்கு: **416.294.4631**

**MARKHAM & PAINTEDPOST**
1 Bedroom for rent in a bsmt. 1 Female/ 1 Male (Rent $900) Sharing rooms also avail. for male & Female. Avail. immediately.
**Contact - 647.785.9979**

**SIMCOE & TAUNTON**
**1800 SIMCOE ST. -** 1 Bedroom for rent in condo. Ladies only. No parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.710.7577**

**MARKHAM & SHEPPARD**
1 Bedrooms for rent in main floor. Sep. entrance & Sep. washroom Close to TTC & Food basic. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.295.4543**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

**TAUNTON & WHITES**
3 Bedrooms + Den house for rent. 2.5 washrooms & 3 Parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.575.5777**

**MARKHAM & ELLESMERE**
3 Bedrooms house for rent. 3 Parking. Close to TTC, HWY 401, Centannial College & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 437.518.3474**

**HARWOOD & ROSSLAND (AJAX) -** 3 Bedrooms house for rent. parking. Close to bus stop, Mall, School & all facilities. Avail. immediately.
**647.656.6214/647.588.6214**

## CONDO. FOR RENT

**MARKHAM & ELLESMERE**
2 Bedrooms & 2 washroom Condo. for rent. 1 Parking & 1 Locker. Close to TTC, HWY 401, STC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.804.4616**

**MCLEVIN & TAPSCOTT**
1 Bedroom + Den & 1.5 washroom Brand new Condo. town house for rent. Close to access the bus & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.831.3784**

**WARDEN & FINCH**
3 Bedrooms Condo. for rent. Student/ Single preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.701.9809**

## APPARTMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**
2 bedrooms Apartment for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.708.3444**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & ELLESEMERE**
1 Bedroom with open kitchen style bsmt for rent. Completely finished with side entrance. 1 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு**:647.685.8937**

மேலும் பக்கங்கள் 12, 14, 15, 16

## BASEMENT FOR RENT

**MARKHAM & 16TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry, parking, kitchen with living room. Close to Mount Joy Go Station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.457.8584**

## BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
2 Bedrooms newly renovated bsmt for rent with furniture. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
**647.685.6219/647.995.9417**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE &ELLESMERE**
2 Bedrooms brand new luxury bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1.5 washroom. Walking distance to Bus. Close to university. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.902.1758**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to school, TTC & other facilities. Avail. immediately.
**416.825.0566/647.502.8680**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC & all other facilities. Couple preferred. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.5519**

## BASEMENT FOR RENT

**MIDLAND & FINCH**
2 Bedrooms bsmt walkout bsmt for rent. 2 Parking. 3 Min. walk to TTC & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.408.9310**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.786.5816**

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Unit

**647-861-8240**

## BASEMENT FOR RENT

**STOUFFVILLE & HWY 48**

2 Bedrooms bright brandnew bsmt for Lease with brand new appliances. Sep. entrance & 1 Parking. No Smoking. Close to Schools, parks & all amenities. Avail. immediately.

Please call: **416.844.4254**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

2 Bedrooms & 2 full washrooms walkout bsmt for rent. Sep. entrance through Garage. 1 parking. Rent - $1,500

**416.918.9848/416.857.7603**

## வாகனப் போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்டதூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## BASEMENT FOR RENT

**HWY 401 & WHITES**

3 Bedrooms + Den bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to all facilities. Rent $1800+ 30% Utility. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.594.9323**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELLESMERE**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Close TTC. 5 Min. walk to Scar. Town Center. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.328.1545**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Very convenient location with close by bus stop, grocery, school & plaza. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.450.7545**

## ROOM FOR RENT

**DANFORTH & EGLINTON**

1 Room for rent in Main floor. 1 Parking. Female only. Close to TTC, School & other facilities. No pet & No smoking. Avail.immediately.

தொடர்புகளுக்கு: **647.869.9733**

## BASEMENT FOR RENT

**MIDLAND & ELLESMERE**

1 Bedroom bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to HWY 401, STC & all amenities. No pets & no smoke. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.210.6556**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop, school & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.866.9837**

## BASEMENT FOR RENT

**TAUNTON & BURKHOLDER**

**PICKERING -** 2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 Parking. Close to bus stop. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.680.3167**

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**

Room for rent in a main floor. Sharing kitchen & washroom Close to all facilities. Avail. July 01, 2025.

தொடர்புகளுக்கு: **647.721.0838**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**

1 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to Bus stop, School & Mall. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.608.1134**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**

1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 Bathroom, Kitchen, Shared washer dryer. Avail. immediately

தொடர்புகளுக்கு: **289.923.1455**

## BASEMENT FOR RENT

**WARDEN & LAWRENCE**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 2 parking. Close to bus stop & all amenities. Avail. immediately.

**647.803.3129/437.233.4848**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

3 Bedrooms for rent in upstairs. Female preferred. In front of bus stop. Close to all facilities. Avail. September 01, 2025.

**647.231.2637/647.766.7089**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**

2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**WESTNEY & ROSSLAND**

**AJAX -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 2 parking. Close to bus stop & all facilities. Avail. August 01, 2025.

தொடர்புகளுக்கு: **647.707.4292**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & 14TH AVENUE**

3 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Close to bus stop, School & all facilities. Avail. August 01, 2025.

தொடர்புகளுக்கு: **647.515.7479**

## ROOM FOR RENT

**SHEPPARD & NEILSON**

1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance & parking. Close to bus stop & all facilities. Avail. immediately.

**437.982.3330/647.237.6826**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCLEVIN**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Small family preferred. Steps to bus stop & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.564.0951**

## BASEMENT FOR RENT

**WARDEN & ELLESMERE**

3 Bedrooms bsmt for rent. 2 Wash rooms, sep.entrance, parking & laundry. family/working couple/ students preferred. Close to bus stop & HWY 401 & 404. Avail. July (1st week) 2025.

தொடர்புகளுக்கு: **416.770.0178**

## BASEMENT FOR RENT

**WARDEN & HWY 401**

1 Large bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. 2 People preferred. Close to TTC & all facilities. Avail. July 01, 2025.

தொடர்புகளுக்கு: **647.740.9279**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Walking distance to schools, shopping & park. No pets & no smoking. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.200.0478**

## BASEMENT FOR RENT

**TAUNTON & WHITES (Pickering)**

1.5 Large walkout bsmt for rent. Sep. entrance, 1 Parking & sep. laundry. 2 Min. walk to bus stop. From Markham & Steeles to pickering 10 minute. Avail. July 01, 2025.

தொடர்புகளுக்கு: **416.418.6934**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**

1 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop & all amenities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.648.6240**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

(Rough) 2 Bedrooms very Spacious bsmt for rent. Sep. entrance, laundry & parking. Furniture included. Close to all amenities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.984.9783**

Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front 2025-06-30 5:28 PM Page 15



## ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. Female /Couple only. Close to TTC, U of T & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.688.8364**

## ROOM FOR RENT

**SCAR.GOLF CLUB & LAWRENCE**

Room for rent. Parking available. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.454.9986**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**

2 Rooms for rent in a 3 bedrooms bsmt. Shared kitchen. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.825.0566**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Close to TTC. Working /student Male preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.707.6095**

## HOUSE FOR RENT

**ST. CLAIR & BIRCHMOUNT**

3 Bedrooms in main floor & 1 bed room in bsmt full house for rent. Sep. entrance & parking. Close to Warden subway, Hindu temple, Super market & all facilities. Avail. July 01, 2025.

**Please call - 416.268.8855**

## HOUSE FOR RENT

**BRIMLEY & ELLESMERE**

3 Bedrooms bangalaw house for rent. 1.5 washroom & 1 Parking. Close to bus stop, STC & shopping mall. No pets. Couple / Family Preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.649.9780**

## HOUSE FOR RENT

**VICTORIAPARK & LAWRENCE**

1 Bedroom annex house for rent. Sep. entrace, Kitchen & Wash room. walking distance to TTC, Mall & Temple. Ladies/ Couple prefered. Avail. immediately.

**416.288.9575/647.762.9575**

## HOUSE FOR RENT

**MCCOWAN & BRIMORTON**

2 Bedrooms main floor for rent. 1 Parking. Couple/Small family/ Ladies prefered. Close to TTC & all the facilities. Avail.immediately.

தொடர்புகளுக்கு: **647.326.8456**

## HOUSE FOR RENT

**STAINES & STEELES**

3 Bedrooms & 2.5 washrooms house for rent. 3 parking. 24 hours TTC. Close to Nofrills, Eraa supermarket & all facilities. Avail. August 01, 2025.

**647.204.1520/416.732.0055**

## HOUSE FOR RENT

**14TH AVENUE & 9TH LINE**

4 Bedrooms & 2 washrooms bangalaw house for rent. Lots of parking. Close to TTC & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.827.3206**

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**

4 Bedrooms & 4 washrooms with full upgrades, new appliances house for rent. No pets no smoking. Avail. immediately.

**416.729.9858 /416.755.2442**

## HOUSE FOR RENT

**KENNEDY & ELLESMERE**

3 Bedrooms main floor for rent. Boys/ Girls preferred. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.899.9199**

## HOUSE FOR RENT

**SCAR.GOLF CLUB & LAWRENCE**

2 Bedroom house for rent. 2 Parking. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.454.9986**

## HOUSE FOR RENT

**WARDEN & FINCH**

4 Bedroom house for rent. 2 parking. Close to TTC & all the facilities. No pets. Avail. July 15, 2025

தொடர்புகளுக்கு: **647.622.0645**

## HOUSE FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**

4 Bedrooms & 3 washrooms house for rent. Rent - $3,200Close to TTC & all the facilities. Avail.immediately.

**416.918.9848/416.857.7603**

## HOUSE / ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedrooms /Rooms for rent. 5 Min. walk to bus stop & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.897.3195**

## HOUSE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**

3 + 1 Bedrooms main floor for rent. 4 Parking. Close to TTC, shopping mall, hospital & school. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.544.7331**

## BASEMENT/ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**

1 Large bedroom with sep. washroom for rent. Rent $1000. 2 Male Preferred.

**DON MILLS & STEELES**

2 Bedrooms bsmt for rent $1600 + Utility. No alcohol, no pets & no smoking. Avail.immediately.

**647.507.2148/647.864.1051**

## HOUSE & BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**

4 Bedrooms house, 3 bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.662.9935**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**

3 +1 Bedrooms full house for rent. 2 parking. Close to all facilities. No pets & no smoke. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.729.4939**

## HOUSE FOR RENT

**WARDEN & ELLESMERE**

3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/working people preferred. Close to TTC & all facilities. Avail. July 2025.

தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE FOR RENT

**BRIMLEY & FINCH**

3 Bedrooms house for rent. 2 Parking. Close to TTC & all facilities. Avail. July 01, 2025.

தொடர்புகளுக்கு: **416.298.0134**

## HOUSE/BASEMENT FOR RENT

**WESTNEY & KINGSTON**

3 Bedrooms & 3 washrooms house & 2 Bedroom bsmt for rent. sep. entrance & sep. laundry. Close to TTC, Hwy 401, School & Mall. Avail. immediately.

**416.821.2777/416.918.9237**

## CONDO. FOR RENT

**KENNEDY & MCNICOLL**

2 Bedrooms & 2 wash rooms condo. for rent. Close to TTC & all facilities. Avail. immediately.

**Contact: 437.993.0192**

## BASEMENT/ROOM FOR RENT

**9TH LINE & HOOVER PARK -** 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.

**MARKHAM & STEELES -**1 Bedroom bsmt for rent. Sep. entrance.

**CONLINS & SHEPPARD -** Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.805.3355**

## HOUSE/ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE -** 4 Bedrooms house for rent. 2 Parking. 2 Minute to TTC & all facilities.

**MORNINGSIDE & OLD FINCH -** 2 Bedrooms for rent in a bsmt. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.627.6194**

Vlambaram -July 01 , 2025 .qxp_Vlambaram-Front 2025-06-30 5:28 PM Page 16



## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
Contact: **647.686.8590**

## JOB VACANCY

**STUDENTS RECRUITERS**
**LOCATION : SCARBOROUGH / BRAMPTON** (Full time / Part time)
**Requirement -** University degree (Canada) Institutional experience & Communication skills in English & Tamil
**416.918.9848 /416.857.7603**

## JOB VACANCY

Looking for **Coffee Cart/ Food Cart operator** pick up cart selling coffee in Toronto tourist attraction (Urgent Job opportunity)
**Full time (Monday to Friday)**
**Location - DOWNTOWN**
please contact. **416.551.8403**

## திருமண சேவை

கனடா மற்றும் இலங்கையில் வாழும் பொருத்தமான மணமக்கள் எம்மிடம் உண்டு.
தொடர்புகளுக்கு: **437.849.9619**

## OFFICE SPACE FOR RENT

**MARKHAM & FINCH**
Spacious office space available for rent. Suitable for professional offices & class rooms /educational institution.
**416.918.9848/416.857.7603**

## WALK IN CLINIC

**DR.U.SOMASUNDARAM**
Family Physician
1200 Markham Road, Unit No.115
Scarborough, ON M1H 2Y9
**T: 416.439.8085**
**Open Hours - Monday - Friday**
**9:00Am - 7:00 Pm**

## DAY CARE

**PICKERING** பகுதியில் குழந்தைகள் சிறுவர்கள் பராமரிப்பு வசதி வழங்கப்படும்.
**(Child care)**
தொடர்புகளுக்கு: **647.962.1569**

## JOB VACANCY

**Morningside & Sheppard** பகுதியில் உள்ள **Restaurant** ஒன்றிற்கு சமையல் வேலை தெரிந்த **Cook** உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

## முதியோர் பராமரிப்பு

**SCARBOROUGH**வில் குறுகியகால மற்றும் நீண்டகால முதியோருக்கான பராமரிப்பு வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.667.0482**


## DAY CARE

**MEADOWVALE & ELLESMERE** பகுதியில் குழந்தைகள் சிறுவர்கள் பராமரிப்பு வசதி வழங்கப்படும். **(Child care)**
தொடர்புகளுக்கு: **647.609.4518**

## V MOVE & DELIVERY

உங்களின் சிறியளவிலான மற்றும் பெரிய அளவிலான உள்ளூர் மற்றும் வெளியூர் **MONTREAL to OTTAWA to TORONTO moving** தேவைகளுக்கு
அழையுங்கள்.
**416.277.4245**




## JOB VACANCY

**AUTO MECHANIC**
SCARBOROUGH பகுதியிலுள்ள Garage ஒன்றுக்கு Auto Mechanic வேலைக்கு அனுபவமுள்ளவர் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு:**416.879.4307**

## வீட்டு பராமரிப்பு

வீட்டுவேலையுடன் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.
இடம் : Pickering
தொடர்புகளுக்கு:**647.970.8392**




## உங்கள் வீட்டு கொண்டாட்டங்களுக்கான உணவு

**GTA** பகுதியில் கொண்டாட்டங்களுக்கான சைவ, அசைவ உணவுகள் உங்களின் தெரிவிற்கு ஏற்ற வகையில் சமைத்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.761.7568 / 416.371.4583**

## TRANSPOTATION SERVICE




**பேருந்து போக்குவரத்து சேவை**
விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி நீண்டதூர, குறுகிய தூர சுற்றுலாப் பயணங்கள் மற்றும் ஏனைய வாகனப் போக்குவரத்து சேவைகளுக்கு
அழையுங்கள்: **416.904.6597**
**416.476.8913**



## COOK & CLEANER WANTED

**Niagara Region**இல் உள்ள **Restaurant & Motal** ஒன்றிற்கு **Cook & Cleaner** உடனடியாகத் தேவை. **Couple** விரும்பத்தக்கது. முழுநேர வேலை. தங்குமிட வசதி வழங்கப்படும்
தொடர்புகளுக்கு: **416.560.6025**




Watson Property Management

We Pro-Manage your Properties!

FREE

FOR CONSULTATION/ SUGGESTIONS!

416 284 9999

WATSON PROPERTY MANAGEMENT

About Us

With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:

- Foreign property owners
- Multi-property investors
- First-time buyers looking to maximize their property Value

We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.

Our Services

- Effective Marketing — Maximize property exposure.
- Affordable Maintenance — Trustable handymen with cost effective repairs.
- Property Showings — Find the right tenants.
- Market Updates — Stay informed on property value.
- Tenant Screening — Secure reliable and responsible renters.
- Lease Renewals & Rent increase — Maximize rental income.
- Lease Preparation — Handle all paperwork.
- Financial Reports — Year-end accounting for tax purposes.
- Move-in Assistance — Stress-free key handovers.
- Legal Notices & Paralegal Support — Professional paralegal guidance.
- Rent & Utilities Collection — Timely payments guaranteed.
- Move-out Management — Key collection and final walkthroughs.
- Regular Inspections — Regular walkthroughs every 6 months.



MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.




AJAX · BRAMPTON · BOWMANVILLE · BEAVERTON · COURTICE · ETOBICOKE · KESWICK · KINGSTON · MARKHAM · VAUGHAN · STOUFFVILLE · KITCHENER

MISSISSAUGA · NORTH YORK · OSHAWA · PICKERING · SCARBOROUGH · TORONTO · TRENTON · WHITBY · WATERLOO · NIAGARA · NEWCASTLE · RICHMOND HILL



We're Expanding & Hiring!

As we CONTINUE TO GROW and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance NETWORK. If you're a skilled handyman OR know someone who is we'd love to hear from you! WE'D love to work together.

REACH US @: 416 284 9999


# Thug Life – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

ஜுன் 2025இல் கமல்ஹாசனின் நடிப்பில் வெளியான படம்தான் தக் லைஃப் (Thug Life). தமிழ் சினிமாவில் முக்கிய இடம் வகிக்கும் இருவரான கமல்ஹாசனும், இயக்குநர் மணிரத்னமும் 38 ஆண்டுகளுக்குப் பின்னர் சேர்ந்து எடுத்த படம் இதுவாகும்.



பெயருக்கு ஏற்ற விதத்தில் இப்படம் சக்திவேல் (கமல்ஹாசன்) என்ற கொள்ளைக் கூட்டத்தின் தலைவரின் (Gangster) வாழ்க்கையைக் காட்டுகிறது. 1994ஆம் ஆண்டில் காவல் அதிகாரிகளுக்கும் இக் கொள்ளைக் கூட்டத்திற்கும் இடையே ஏற்படும் சண்டையில் அப்பாவியான பத்திரிகை விநியோகம் செய்பவர் இறக்கிறார்.

அநாதையாக ஆக்கப்பட்ட அவரது மகன் அமரனை (சிம்பு) சக்திவேல் வளர்க்கிறார். பல வருடங்களுக்கு பிறகு ஒரு கொலை செய்ததால் சக்திவேல் சிறைக்குச் செல்கிறார். அதற்கு முன் அவர் தனது குழுவின் தலைவராக அமரனைத் தெரிவு செய்கிறார்.



இதனால் கோபமடைந்த குழுவின் மூத்தவர்களை அமரன் சமாளிப்பாரா? இல்லாவிட்டால் அவர்களது சதியில் சிக்குவாரா? என்பதை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தின் கதை மிகவும் பழமையாகவும், எளிதாகவும் உள்ளது. பழமையான கதைகளை எடுத்துக்கூறும் விதத்தில் அவற்றை சுவாரஸ்யமாகவும் மாற்றலாம். உதாரணமாக நடிப்பு, வசனம், வடிவமைப்பு, கதாபாத்திர அமைப்பு ஆகியவற்றால் படத்தை சிறப்பாக்க லாம். ஆனால், இப்படத்தில் இவ்வாறு இல்லாமல் காட்சி, கதை, கதாபாத்திரங்கள் அனைத்தும் மிகவும் பழமையான, வழமை யான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இப்படத்தின் பல காட்சிகள் ஏற்கக் கடினமாக இருக்கிறது. சில கதாபாத்திரங்களின் அமைப்பை விரிவாகக் காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

குறிப்பாக இப்படத்தில் பெண் கதாபாத்திரங்கள் மிகவும் குறைவாக இருந்தனர். இருந்த பெண்கள் அனைவரும் கதாநாயகனின் உறவாகவும், ஏதோ ஒரு கஷ்டத்தை அனுபவிப்பதாகவும், அக்கஷ்டத்திற்குக் காரணமானவரை கதாநாயகன் தண்டிப்பதாகவும் காட்டப்படுகின்றன. திறமையான பிரபல நடிகைகளை ஆண் கதாபாத்திரங்களின் கட்டுப்பாட்டினுள் மட்டும் வைக்கும் நிலையில் இன்றும் பிரபல இயக்குநர்களும், கதாநாயகர்களும் உள்ளனர் என தெளிவாகத் தெரிகிறது. ஐஸ்வரியா இலட்சுமியின் வைத்தியர் கதாபாத்திரம் நன்றாக



இருப்பதுபோல் தெரிந்தாலும் அது சிறிதளவு நேரம்தான் படத்தில் இடம்பெற்றது.

முன்னிலையிலுள்ள கலைஞர்களின் ஆக்கமாக இப்படத்தை பார்க்காமல், சாதாரண ஒரு குழுச்சண்டை படத்தைப் பார்க்க விரும்புவோர் இதனை பார்க்கலாம்.

## எனக்கு மரணமில்லை

கலையும் தொழிலும் கற்றுச் சிறந்தே கடமைகள் ஆற்றி விளங்கிடுவேன்
உலகம் தழுவி உயிர்க்குல மெல்லாம் ஓங்கி உயர வழி செய்வேன்
மலையினும் ஓங்கும் புகழும் பெருமையும் மாண்பும் ஒளிர வாழ்ந்திடுவேன்
நிலையில் உயர்ந்து நிறைவாழ்வு காணும்நெறியோன் எனக்கு மரணமில்லை

அன்பும் அறமும் அறிவும் ஓங்கி அகிலம் வாழப் பணிசெய்வேன்
பண்பால் உயர்ந்து பணிவால் நெகிழ்ந்து பாரகம் போற்ற வாழ்ந்திடுவேன்
கண்போல் அனைத்து மாந்தர்க்கும் அருளிக் கனிவே வடிவாய் விளங்கிடுவேன்
மன்பதை யெல்லாம் தழுவிக் காக்கும் மாண்பால் எனக்கு மரணமில்லை

வான்போல் உயர்ந்து மலைபோல் நிமிர்ந்து மாண்பால் நெகிழ்ந்து வாழ்ந்திடுவேன்
கோன்போல் திகழ்ந்து குணத்தால் மிளிர்ந்து கொள்கை தவறா தியங்கிடுவேன்
மாண்பால் வளர்ந்து மாநிலம் முழுதும் வாழ்த்தப் பணிபல இயற்றிடுவேன்
காண்போர் வியந்து கனிவோடு வாழ்த்தும் கருத்தால் எனக்கு மரணமில்லை

# மின்னணு உலகில் மனிதம் போதிக்கும் நூலகங்கள்

யதுசனா சவுந்தரராசா
யாழ்ப்பாணம்



இன்றைய டிஜிட்டல் யுகத்தில் தகவல் அனைத்தும் ஓர் அழுத்தலில் விரல் நுனியில் கிடைக்கும் நிலையில் பாரம்பரிய வாசிப்பு முறையும் நூல்களும் தேவையற்றன ஆகிவிட்டனவா என்பது பொதுவான கேள்வி. கணினி, நவீனமயப்படுத்தப்பட்ட கைத்தொலைபேசிகள், இணையதளம் போன்றவை உலகை ஒரு கைப்பிடி அளவிற்குக் கொண்டுவந்தபின் நாம் இன்னும் ஏன் நூல்களை நாட வேண்டும் என்பது பலரது எண்ணம். ஆனால் உண்மை அதுவல்ல. நூல்களும் வாசிப்பும் இன்னும் தமக்கான முக்கியத்துவத்தை இழந்துவிடவில்லை. இன்றைய பரபரப்பான இயந்திரமய வாழ்க்கையில் நாம் இழந்துவிடும் நிஜங்களை மீண்டும் காட்டிடும் யதார்த்தக் கண்ணாடிகள் அவை.

அச்சிடப்பட்ட ஒரு நூலை திறந்து வாசிக்கும் அனுபவம் தனித்துவமானது. புத்தகத்தின் பக்கங்களின் வாசம், கையில் அவற்றை ஏந்தும் உணர்வு, தாள்களைப் புரட்டும் சத்தம், பழைய மை வாசனை என்பன இலத்திரனியல் சாதனங்களின் திரையினூடு கிடைத்து விடாத உணர்ச்சிப் பயணம். இலத்திரனியல் திரையில் வாசிப்பதிலும் பார்க்க அச்சிட்ட நூல்களில் வாசிப்பது கவனத்தையும் புரிதலையும் அதிகரிக்கின்றது.

நூலகங்கள் என்பது வெறுமனே நூல்களைப் பற்றியதல்ல. அது மனிதர்களைப் பற்றியது. சமூக கலாசார கல்வி மையமாக செயற்பட்டு ஆழமான அர்த்தமுள்ள கல்வியை ஊக்குவிக்கும் இடம். மழலைகள் கதைகள் வாசிப்பது முதல் முதியோர்கள் நாழிதழ்கள் வாசிப்பது வரை வாழ்வின் அனைத்து படிநிலைகளிலும் வாசிப்பு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

ஒரு நல்ல புத்தகம் உள்ளத்தில் ஆழம் வரை இடம்பிடிக்கும். வாசிப்போருக்கு தம் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாயும் இவ்வுலகை வேறு ஒருவரின் பார்வையில் காட்டும் ஜன்னலாகவும் இருக்கும். நாவல்கள் வாசிப்போரின் மனதை உருக வைக்கும், நாள்கணக்கில் அதுபற்றி நினைந்திருக்க வைக்கும் நன்றே எழுதப்பட்ட சான்றோர் வரலாறு உணர்ச்சியால் கலங்க வைக்கும். வாழ்வை வேறு பல பரிமாணங்களிலும் நோக்கத் தூண்டும். வாசிப்பில் நேரம் செலவிடப்படுவதில்லை, அது வாழ்வின் பயனுள்ள நேரங்களை உருவாக்குகின்றது.



வாழ்க்கை சில நேரங்களில் மிகவும் கடுமையான நிலைக்குச் செல்லக் கூடும், யாரும் என் வலியைப் புரிந்து கொள்ள மாட்டாரா என நினைக்கையில் நூலகத்தின் மூலையில் ஒரு புத்தகம் தோள்சாய்த்து அழைக்கும். புத்தகத்தின் உலகில் மூழ்கிப் போகையில் கவலைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும், அமைதியாக எம்முடன் அமர்ந்து நீ தனித்தவன் இல்லை என்பதை உணரச் செய்யும். புத்தகங்கள் செய்யும் மாயம் இதுவே. அவை பேசுவதில்லை ஆனால் மௌனமாகச் செவிமடுக்கின்றன.

மனிதரை தனிமைக்குள் தள்ளும் இலத்திரனியல் திரை போன்றல்லாது நூலகங்கள் ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன. புத்தகக் குழுமங்கள், கவிதை மற்றும் இலக்கிய உரை வாசிப்பு நிகழ்வுகள், பத்தகக் கண்காட்சிகள் மற்றும் களநிகழ்வுகள் அனைத்தும் நூல்களை ஒரு இடைமுகமாகக் கொண்டு மனிதர்களை ஒன்றிணைப்பது.

வசதிபெற்ற பெருநகரங்கள் நவீன தொழிநுட்பம் மற்றும் இணையத்தின் வினைத்திறனில் பிரகாசிக்கும் போதும் இன்றும் இவ்வசதியைப் பெறாத கிராமப் புறங்களில் மனிதனின் அறிவைப் பிரகாசிக்கச் செய்யும் பணியினை நூலகங்கள் செவ்வனே மேற்கொள்கின்றன. நம்பகத்தன்மை வாய்ந்த தகவல்களை வழங்குவதுடன் பழமையான கையெழுத்துப் பிரதிகள், வரலாற்று ஆவணங்கள், பிராந்திய இலக்கண இலக்கியங்கள் போன்றனவும் இலத்திரனியல் வாசிப்பை விடவும் பாரம்பரிய நூலகங்களில் பயிலும் போது கிடைக்கும் அனுபவம் அருமையானது. இவை வெறும் தகவல் தொகுப்புகள் அல்ல, ஒரு தேசத்தின் ஆன்மா.

இலத்திரனியல் சாதனங்களின் தொடர்ச்சியான அறிவிப்பு சமிக்ஞைகள், தொடர்ச்சியான திரைப் பாவனை மற்றும் கவனச் சிதறல்கள் அனைத்தும் மனஅமைதியைக் குலைத்துவிடும் அபாயம் கொண்டன. ஆனால் நூலகங்கள் இதற்கு எதிரான இயல்பு கொண்டவை. நூல்களின் மெல்லிய பக்கங்களை புரட்டும் ஒலியும் அதனோடு இணைந்த பரந்த அமைதி நிலையும் மனதிற்கு இதமான மருந்தாக அமைகின்றன. மனநல நிபுணர்களே நூலகப் பயணங்களை மன அழுத்தத்தைக் குறைக்கும் அம்சங்களாகப் பரிந்துரை செய்கின்றனர்.

பள்ளிப் பாடநூல்களைத் தாண்டி வாழ்க்கை வரலாறுகள், வரலாறுகள், விஞ்ஞானப் புனைகதைகள் மற்றும் இலக்கியம் எனப் பரந்த கடல் போன்றது அறிவு. அந்நூல்களை ஆர்வத்துடன் கற்கும் போது இன்னும் இன்னும் அதிக கேள்விகள் எழுந்து மேலும் தேடிக் கற்கத் தூண்டும். சுயகற்றலையும் தூரநோக்குடனான அறிவுத் தேடலையும் ஊக்குவிக்கும்.

நூலகங்கள் படைப்பாற்றலை வளர்க்கும் மத்திய நிலையங்களாகும். அமைதியான இடங்களில் தான் கற்பனைகள் மலர கின்றன. புத்தகப் பக்கங்களில் ஓவியம் வரைவர், எழுத்தாளர்கள் மணிக்கணக்கில் அமர்ந்து புதிதாக இலக்கியம் படைக்க மொழியின் இயல் பழகுவர், கவிஞர்கள் மௌனமாக அமர்ந்து கவி படைப்பர், பழைய கண்டுபிடிப்புக்கள் பற்றி கற்று நவீன படைப்புக்களுக்கு வழிகாண்பர் அறிவியலாளர்கள். நூலகம் கற்பனையை ஊக்குவிக்கின்றது, சிந்தனையைப் பரப்புகின்றது.


ஒவ்வொரு நூலகத்தின் தடங்கலற்ற சேவைக்கும் பின்னால் ஓர் ஆளுமை மிக்க நூலகர் இருப்பார். அவர்களால் புத்தகங்கள் உயிர் பெறுகின்றன. அவர்கள் எம் தேவைக்கேற்ப நூல்களைப் பரிந்துரைக்கின்றனர், வழிகாட்டுகின்றனர், செவிமடுக்கின்றனர். பாடசாலைக் கல்வியில் ஆசிரியர்கள் வழிகாட்டுவது போல நூலகக் கல்வியில் வழிகாட்டிகள் அவர்கள்.

இலத்திரனியல் திரைகள் ஊடான வாசிப்பு சிறந்ததா நூல் வாசிப்பு சிறந்ததா எனும் கேள்வி தவறானது. நாம் உருவாக விரும்பும் அறிவியல் சமுதாயம் வேகமான வசதிமிக்க இலாபத்தை நோக்கி ஓடும் சமுதாயமா அல்லது ஆழமான சமநிலை கொண்ட மனிதநேயத்தில் வேரூன்றியதா என்பதே.

ஒரு நூலகத்தில் அமைதியாக அமர்ந்து புத்தகத்தின் பக்கங்களை மெல்லத் திருப்பியதுண்டா? உங்கள் உள்ளத்தைத் துளைக்கும் ஒரு வரி படித்ததுண்டா? அச்சமயத்தில் உங்கள் மனம் புதிய ஒரு கதவினூடு புத்தம் புது பாதைகளில் சஞ்சரித்ததுண்டா? உங்களுக்கே பதில் தெரியும்.

ஆம் நமக்கு நூலகங்கள் என்றுமே பயனுடையவையே, அறிவுக்காக மட்டுமல்ல சிந்தனை விருத்திக்காக, தகவல்களுக்காக அல்ல அதன்பின் வரும் வினைதிறன் மிகு கற்பனைகளுக்காக, அதன்பால் கிடைக்கும் அங்கீகாரத்துக்காக. அவை காலம் தாண்டியும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள், எதிர்காலத்துக்கு விட்டு வைக்கும் ஒரு நம்பிக்கை ஒளி. அந்த ஒளியைப் பாதுகாக்க வேண்டும், வளர்த்தெடுக்க வேண்டும், கொண்டாட வேண்டும்.



## திருக்குறள்

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்
நான்கும் இழுக்கா இயன்றது அறம். (35)**

பொறாமை, பேராசை, சினம், கெட்ட சொற்களைப் பேசுதல் ஆகிய நான்கும் அறத்துக்குப் புறம்பானவை ஆகும். ஆதலால், இவற்றைத் தவிர்த்து வாழ்வதே சிறந்த அறமாகும்.

**பதவுரை:** அழுக்காறு – (பிறர் ஆக்கம்) பொறாமை, அவா – பேராசை, வெகுளி – சினம், இன்னாச்சொல் – தீய மொழி, நான்கும் – (இவை) நாலும், இழுக்கா – இழுக்கி அதாவது விலக்கி, இயன்றது – நடந்தது, அறம் – நல்வினை.